
# அருள் ஒளி

மாவைக்கந்தன்

திருவிழாச் சிறப்புமலர்



இதழ் 154 ஆடி 2021

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவாசற்கோபுரத் திருப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. ப. சேயோன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

T.P : 021 321 3151, 021 224 1909

e.mail: thurkaiammantemple@gmil.com
face book: @tellidurga

ஆடி - 2021 மாதமலர்

பதிவு இல: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

## இந்து சமயம், இந்து நாகரிகம், சமஸ்கிருதம் கற்பதில் மாணவர் ஆர்வம் மிகவும் குன்றிவருகிறது

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதர உயர்த்தரத்தில் இந்துசமயம், இந்துநாகரிகம் வடமொழி போன்ற பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் மாணவர் தொகை என்றும் இல்லாதவாறு மிகவும் குறைந்துசெல்கிறது. இதனால் பல்கலைக்கழகங்களில் இத்துறைசார் கல்வியில் மிகக் குறைந்த மாணவர்களே கற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கலைத்துறை சார்ந்த பிரிவில், உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களில் பலர், எண்பதுகளில் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாக எடுப்பதில் ஆர்வம் காட்டினர். பல்கலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் பலர் வேறு பாடங்களைத் தேர்தெடுக்கும் வழக்கம் இருந்தது. ஆரம்பத்தில் கொழும்பு பல்கலைக்கழத்தில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்துநாகரிகம் (பாடம்) பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களில் பட்டப்படிப்புக்கு ஒரு பாடமாகக் கற்கும் சந்தர்ப்பம் கிட்டியது. யாழ் பல்கலைக்கழகத்தில் இத்துறை வளர்ச்சி கண்டு விரிவாக்கம் பெற்றது. இந்து சமயதத்துவம் சிறப்புப்பட்டம் சமஸ்கிருதத்துறை சிறப்புப்பட்டம் எனப் பல மாணவர் பயன்பெற வாய்ப்பு ஏற்பட்டது.

தற்போது பாடசாலைகளில் கலைத்துறையில் பல புதியபாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந் நிலையில் மேற்குறிப்பிட்ட சமயம் சார்ந்த பாடங்களை மாணவர் தேர்ந்தெடுப்பது என்றுமில்லாதவாறு குறைந்தள்ளது. இதனால் பாடசாலைகளில் சமயபாடம் போதிக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத பாடத்தை தேர்ந்தெடுப்பவர்கள் மிகமிகக் குறைந்து செல்வதால் எதிர் காலத்தில் பல்கலைக்கழகத்தில் அத்துறை செயலற்றுப் போக வாய்ப்பு உண்டு எனவே மேற்குறித்த பாடத்தெரிவு பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக விசேட நடவடிக்கை எடுக்கவேண்டியது அத்துறை சார்ந்தவர்களின் தலையாய கடமையாகும்.

திருச்சிற்றம்பலம்

நீள்நிலைக்கோ புரமதனை இறைஞ்சிப் புக்கு
நிகரிலாத் தொண்டருடன் நெருங்கச் சென்று
வாள்நிலவு கோயிலினை வலங்கொண் டெய்தி
மதிச்சடையார் திருமுன்பு வணங்கி நின்று
தானுவே ஆற்றின்கண் ஓடம் உய்க்குந்
தன்மையால் அருள்தந்த தலைவா நாகப்
பூணினாய் களிற்றுரிவை போர்த்த முக்கட்
புனிதனே எனப்பணிந்து போற்றி செய்தார்

திருச்சிற்றம்பலம்


- பன்னிரண்டாம் திருமுறை


உ
அம்பாள் துணை

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# தலைவாசற் கோபுரத் திருப்பணி

ஸ்ரீ துர்க்கை அம்பாளின் தலைவாசற் கோபுரத் திருப்பணிக்கான அன்பளிப்புக்களை பின்வரும் வங்கிக் கணக்கின் மூலம் செலுத்தலாம். அல்லது தேவஸ்தான அலுவலகத்தில் நேரடியாக வழங்கி பற்றுசீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.



**இலங்கை வங்கி, சுன்னாகம்.**

**கணக்கு இலக்கம்: 77683985**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
# ஸ்ரீ - மகாவல்லி தேவசேனா சமேத ஷண்முகப் பெருமானின் மகத்தான திருவிழாக்களின் சிறப்புகளும் வரலாறுகளும்

அமரர். மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்,
முன்னாள் ஆதீன கர்த்தா, மாவையாதீனம்

ஆதியாய், அநாதியாய், அன்பே வடிவாய் அழகே உருவாய், ஆனந்த அமுதமாய், அவனிவாழ் மக்கட்கெல்லாம், அருள் பாலிக்கும் மாவை வளர் அறுமுகப் பரஞ்சுடரின் கருணை பொழி திருமுகங்களும், அழகிய மணிமகுடமும், அணிபணிகளேந்திய அகண்ட மார்பும், ஆயுதம் பல தாங்கிய பத்துக் கரங்களும், அபயவரதகரமிரண்டும், அவற்றில் தாங்கிய அழகிய வேலும், குக்குடக் கொடியும், சிறகு விரித்த சிகி வாகனமுமாய்க் காட்சிதரும் முழுதும் அழகிய மூர்த்தியையும், அவனருகே மலர் மாலையணிந்த தோள்களும், முழுமதியன்ன வதனங்களும், தெய்வமொழித் திருவாயில் புன்னகையும், அணிபணிகள் பூண்ட திருமேனியும், சிலம்பணி திருவடிகளையுமுடைய தேவியர் இருவரையும் பார்க்கும் போது,

**'பத்தித் திருமுகமாறுடன், பன்னிரு கைகளுமாய்த்**
**தித்தித்திருக்கும் திரு அமுது கண்டேன்'**

என்ற அருணகிரியார் திருவாக்கு எம் முள்ளத்தில் வராமல்விடாது.

எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து எதையும் கடந்து, இப்பாலுக்கிப்பாலாய் அப்பாலுக்கப்பாலாய், அகில உலகமும், அளாவி நிற்கும் அறுமுகப் பரம்பொருளை கச்சியப்ப சுவாமிகள்,

**'எங்கணும் திருவதனங்கள்,**
**எங்கணும் விழிகள்**
**எங்கணும் திருக்கேள்விகள்,**
**எங்கணும் கரங்கள்**
**எங்கணும் திருக்கழல்கள்,**
**எங்கணும் வடிவம்**
**எங்கணும் செறிந்து**
**அருள் செயும் அறுமுகத்திறைக்கே'**

எனக் கந்தப் புராணத்தில் ஓர் விசுவரூப சித்திரமாக மிக நுட்பமாகக் காட்டுகிறார் இப்பரஞ்சுடர்.

**'அயனெனவாகி, அரியெனவாகி,**
**அறியொணாப் பொருளதுவாகி'** விளங்கித்

**'திசையாகி, அத்திசைக்கோர் தெய்வமாகி'**

நான்கு திசைகளுடன் கீழ் மேல் ஆகிய ஆறு திசைகளிலும் வாழ்கின்ற மக்கட் கெல்லாம் அருள் சுரக்கும் ஐயனாக அறுமுகம் தாங்கி நிற்கிறான். இவ்வழகிய பெருமானைப் பார்த்தாலும், அவன் புகழ் கேட்டாலும், அவன் திருநாமம் ஓதினாலும் உள்ளமெலாம் தித்திக்கும் பேரானந்த அனுபவம் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறுமுகமில்லாத அடியார்க்கு, தன் அருள்பொலி ஆறு முகங்காட்டி, அழகு பொலி உருக்காட்டி, தன் அழகாலும், அருளாலும், அவர் தம் பாவம் தடிந்து, பிறவித் தாபம் தணிக்கும் பேரருளாளனாக மாவைப்பதியில் திகழ்கிறான். இவ் வருள் மாட்சியைத் தானே மாவை முருகன் மேல் ஆராத பக்தி கொண்ட அடியவரொருவர்.

**'தெய்வநிறை சந்நிதிச்**
**செந்நின்று கைநீட்டித்**
**திருவருட் டிறங்க ஞுன்னித்**
**தேயுமன மழியுமவர்**
**செங்கைக்கு மெட்டுந்'**

என்று பாடுகிறார்.

இவ்வழகானதிருப்பெரும் வடிவத்தையுடைய எம்பெருமான் விக்கிரகத்தைச் பல கலைகளிலும் பாண்டித்தியம் கொண்டவரும், சிற்ப சாஸ்திரங்களில் மிகத் திறமான ஞானத்தை உடையவரும் சங்கீதப்பிரியரும் சைவானுஸ்டானங்களில் அதிசிரத்தை உடையாரும், தர்ம சிந்தனையாளருமான பிரம்மஸ்ரீ ஏரம்பையர் அவர்கள் தமது கைகளாலேயே உருவாக்கினர் என்பதை கர்ணபரம்பரைக் கதையாகவும் நாம் அறிகிறோம். இவர் ஸ்கந்த சஷ்டியில் உபவாசமிருந்து திருக்கார்த்திகையன்று, மெழுகிலே இச்சுவருபங்களை வார்த்தெடுத்து வைகாசி விசாகத்தன்று. பஞ்சலோகங்களினாலே பூர்த்தி செய்தார் எனப் பதிவேடுகள் கூறுகின்றன. சிவபூஜாதுரந்தரர்கள் வேதகீதம் ஒலிக்க, மெய்யடியார்கள் திருமுறை ஓத, இளமங்கையர் இன்னிசை வாத்தியங்கள் ஒலிக்க, ஜன்னிய இராகங்களை ஆதீன இசையாளர் நாதஸ்வரமூலம் இசைக்க, அஷ்டமங்கலங்கள் சகிதம் பூரணத்துவம் பெற்றதோர் யாகசாலையுள் வைத்து ஷண்முகப் பெருமானையும் வள்ளி தேவசேனா சக்திமார்களையும் பஞ்சலோகத்தினாலே உருப்பெறச் செய்தாரென ஏடுகள் மூலம் அறியப்படுகிறது. ஜெயவீர சிங்கையாரியச் சக்கரவர்த்தியும் இவ்வுருவங்களைத் தரிசித்தாரெனவும் அறியப்படுகிறது. *(1458-70)*

இத்திருவுருவங்கள் ஆனி உத்தரத்திற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, முதன் முதலாக மகோற்சவ காலத்தில் ஐந்தாம் திருநாளன்று ஆனந்தத் திருநடனத்துடன் எம்பெருமானின் சிறந்த உற்சவங்கள் ஆரம்பமாயின. இத்திருநடன உற்சவத்தை இங்கிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் ஆரம்பித்து வைத்தனர். தாந்தாம் வேண்டியவற்றைச் சித்திகரமாகத் தந்தருளிய ஷண்முகப் பெருமானிடத்து அளவிலாப் பக்தி கொண்ட இச்செட்டிமார் திருச்செந்தூர் விழாக்களை அடியொற்றி இத்திருநடன உற்சவத்தை ஆரம்பித்து வைத்தனர். இன்றும் இத்திருநடனம் மிகவும் சிறப்பாக இடம்பெறுவதை யாவரும் அறிவர்.

மகோற்சவ காலங்களில் அதி முக்கியமாக இடம் பெறும் இரதோற்சவம் பிரசித்தமானதாகும். இங்கே விக்னேஸ்வர், முத்துக்குமாரர், மீனாட்சி சமேத சுந்தரேஸ்வரர் தேரில் முன்செல்ல பின்னால் இரதாருடராய்ச் சண்டேசுவரர் தொடர நடுநாயகமாக அழகிய சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகோத்தர மகாரதத்திலே ஷண்முகப்பெருமான் சக்திகளுடன் திருவூஞ்சலிற் வருங் காட்சியை வார்த்தைகளால் வடிக்க முடியாது.

வருட முழுவதும் இடம் பெறும் விழாக்களுள் ஷண்முகப் பெருமானின் இரதோற்சவக் காட்சியே அதிசிறப்பு வாயந்ததாகும். அதிகாலையிலிருந்து மாலைவரையும் தேர்விழாவின் சிறப்புகளையும் திருவருள் சுரக்கும் திருக்கோலப் பொலிவையும்வேறு எங்கேயும் காணமுடியாது. உற்சவங்கள் நடாத்துவதற்கு எத்தனையோ புண்ணியங்கள் சேரவேண்டுமாம் அதுவும், இரதோற்சவம் செய்வதற்குப் பெரும்பெரும் தவங்களயும் செய்யவேண்டுமாம். பெருந் தவமுடையார்க்கே இச் சிவபுண்ணியம் கிடைக்குமென நூல்கள் இயம்புகின்றன. மாவிட்டபுரத்திலும் உற்சவங்களை நிகழ்த்துவோர் பூர்வகன்மப் பயனுடையர் என்றே பகர வேண்டும். அதனால் உற்சவங்களும் புனிதமடைகின்றன.

பறங்கியர் காலத்தில் தரைமட்டமான இவ்வாலயத்தை ஆங்கிலேயர் ஆட்சி மலர்ந்த வேளை- *1782* ம் ஆண்டள்வில் தீட்சிதர் சபாபதிக்குரு அவர்கள் மீண்டும் நிர்மாணித்து திருமஞ்சனக் கிணற்றுள் பாதுகாப்பாக ஜலாதிவாசம் செய்யப்பட்ட மூர்த்திகளை வெளிக்கொணர்ந்து, பிரதிஷ்டை செய்து உடனேயே மகோற்சவங்களை ஆரம்பித்தபோது பஞ்ச ரதங்களையும் ஓடவிட்டுச் சிறப்பாக மகோற்சவங்களை நடாத்தினர் எனக் கச்சேரியிலுள்ள பதிவேடுகள் சான்று பகர்கின்றன. இப்பஞ்சரதோற்சவத்தை முன்னின்று நடாத்திய கந்தரோடை விஸ்வநாதர் அவர்கள் எக்காலமும் தமது சந்ததியினரே இதனை நடாத்தி வரவேண்டும் மெனப் பிரார்த்தித்து அதற்கான சாசனங்களை நெறிப்படுத்தினார். *1823* ம் ஆண்டிலும் *1896* ம் ஆண்டிலும் *1910* ம் ஆண்டிலும் நிறைவேற்றப்பட்ட உறுதிகளின் படியும் இச்சந்ததியினரே இன்றும் இவ் விழாவை நடாத்துகின்றனர். அதுவே ஓர் உன்னத தவமாகும். *1927* ம் ஆண்டு இப் பரம்பரை வழிவந்த ஆறுமுக ஞானியாரது இரண்டாம் புத்திரன் சுப்பிரமணியர் மகன் வைத்திய கலாநிதி ஆறுமுகம் அவர்களின் திருக்குமாரத்திகளான சுந்தரகுகாம்பாள், மரகதவல்லி என்போரை வதுவை செய்த, மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வாசகரான புண்ணியசீலர் சின்னத்தம்பி (சாணையர்)யின் குமாரர்களான கந்தையா, சரவணமுத்து என்போர், இந்த இரதாற்சவத்தை நடாத்தும் சிவபுண்ணியத் திருத்தொண்டைப் பொறுப்பேற்றனர். ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து, இன்றும் இவர்களே இவ்விழாவினைச் சிறப்புற நடாத்துகின்றனர். இவர்கள் கல்வி, செல்வச் சிறப்போடு குடும்பச் சிறப்பும் பெற்றதோடு எந்நாளும் மலர்ந்த முகத்தோடும் தெய்வீக உணர்வோடும் இன்புற்று வாழ்கின்றனர். இவர்களை நாடு நன்கறியும்.

**'நகைஈகை, இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு'**

என்னும் குறளுக்கமைய வாழ்ந்து வரும் இப்பெருந்தகையார்கள் குடிச்சிறப்பு இந்நாட்டின் மேன்மைக்கு உறுதுணை தருகிறது. இவர் முன்னோர்கள் ஆரம்பித்து வைத்த பெரும் புண்ணிய தர்மங்களை இன்றும் இவர்கள் மிகு சிறந்த சக்தி வாய்ந்தனவாக நடாத்தி வருகின்றனர். இவர் எண்ணங்கள் யாவும் தெய்வீகமுடையவையே, செயல்கள் எல்லாம் அதன் வழியனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப் பொலிவு கண்டு ஆர்தல்'**

என்னும் பெரியபுராண அடியொற்றி மண்ணிலே வாழும் மாந்தர்களில் இறைவனைக்கண்டு, அமுது செய்வித்து ஆனந்த பரவசங் கொள்வார்கள். அன்னதானம் செய்து செய்து அளவற்ற திருவருளுக்காளாகிவிட்டனர். தமது தேர்த்திருவிழாவன்று திருமுருகப் பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல் திருவமுது செய்வித்து வேதியர்கட்கெல்லாம் ஊண், பொருளீந்து, அன்றைய தினம் தேர்த்திருவிழாக் காணவரும் அடியவர்களுக்கு அமுது கொடுத்து மகிழ்வதை எங்ஙனந்தான் வார்த்தைகளாற் கூறமுடியும்! "ஷண்முகப்பெருமானுக்கு" எனக் கூறினாற் போதும்! உடல் பொருள், ஆவி அத்தனையையும் ஒருங்கே அர்ப்பணிப்பர் இப் பெருந்தகையோர். முன்னர் இவர்கள் முந்தையோர் ஷண்முகப்பெருமானுக்கு வெள்ளைக் கல்லினாலான ஒரு திருக்கோவிலை நிர்மாணித்தனர். கந்தையா - சரவணமுத்துவோவெனின், 1961 ஆம் ஆண்டு ஷண்முகப் பெருமானுக்கு மகாமண்டபத்தில் ஒரு கருங்கற்றிருக்கோவிலை நிர்மாணிக்க முன் வந்தனர். 1966 - ம் ஆண்டு இத் திருக்கோவிற் கருங்கற்றிருப்பணியை முற்றுவித்து இன்று ஸ்தூபி வேலைகளயும் முற்றுவித்து முழுமையான ஒரு ஷண்முக ஆலயம் அமைத்து விட்டனர். இக் கும்பாபிஷேகத்தையும் தம் பொருட் செலவிலேயே நடாத்துகின்றனர். ஷண்முகப் பெருமானின் இரதோற்சவ உபயம் மூலம் நிரம்பிய திருவருளுக்காளான இவர்களும், இவர்தம் குடும்பத்தினரும் திரும்பத் திரும்பத் தமது செல்வங்களை மகேஸ்வர பூசை, அதிதி பூசை ஆகியவற்றிகுச் செலவிடுவதால் இவர்களது குடும்பம் பரந்து விரிந்து இன்புற்று வாழ்வதை நாம் காண முடிகிறது.

ஷண்முகப் பெருமானின் இரதோற்சவத்தைப் பற்றியும் அவ்வுபயத்தை நடாத்துவது பற்றியும் ஒரு கதையுண்டு. இரதோற்சவத்துடன் ஒரு பரம்பரையும் வளர்ந்து வருகிறது. ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் வேரூன்றி வளர்ந்து வரும் இப் பரம்பரையினர் எம் பெருமானின் திருவருளுக்காளாகி அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று வாழ்வதை காணும்போது ஏனையோர் உள்ளம் பூரிப்படைவது போல் எமது உள்ளமும் பூரிப்படைகின்றது. "ஆறுமுக ஞானியார்" என்பவர் ஆறுமுகப் பரஞ்சுடரில் அளவிலாப் பத்தி பூண்டவர். பெருமானின் நீழலில் வாழும் நோக்கோடு கீழை வீதியில் மடம் ஸ்தாபித்து ஜபதபங்கள் இயற்றி வாழ்ந்து வரும்போது இப்போதிருக்கும் விசாலமான தேரோடும் வீதியை அமைப்பதற்கு அயராது உழைத்தனர். இவர் கந்தரோடை விசுவநாதரது மகன் கதிரித்தம்பி அவர்களின் புதல்வராவர். எக்காலமும் மாவை முருகப் பெருமானின் ஆலயம் வைதீக சமய அனுஷ்டானங்களின் கோட்பாடுகளுக்கமைய நடாத்தப்பட வேண்டுமென்ற அவாவினைக் கொண்டு பூசைகள் யாவும் தவறாது நடைபெற வேண்டு மென்பதற்காக சாதனங்களையும் உருவாக்கியவர். 1838ம் ஆண்டளவில் கதிரித்தம்பி சிவபதமடைந்ததும், ஆறுமுக ஞானியார், முற்றுந்துறந்த முனிவர்போல கிழக்கு வாயிலிற் கட்டப்பட்ட தமது மடத்திலேயிருந்து நல்லறம் நடாத்திவருங்காலை 1849- ம் ஆண்டில், இப்போது ஷண்முகப் பெருமானின் திருத்தேர் நிற்குமிடத்துக்கு முன்பாக இறைவனடி சேர்ந்ததும் அன் விடத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதி வைக்கப்பட்டார். இன்றும் ஷண்முகப்பெருமானின் "முகோத்தர மகாரதம்" இச்சமாதிக்கு முன்பாகவே நிலை கொண்டிருக்கிறது. ஆறுமுக ஞானியாரது மௌனஞ்சலியும், தெய்வீகத் திருத்தொண்டின் பெறுபேறுகளும், உயர்ந்த புனிதமான சிந்தனைகளும் அவ்விடத்தில் இன்றும் நிலை கொண்டிருக்கின்றன.

ஆறுமுக ஞானியாரது பேரன் வைத்திய கலாநிதி மூலம் இச்சந்ததியாரது வாரிசுகளாக வந்துள்ள கந்தையா, சரவணமுத்து ஆகியோரும் எவ்விதகுறைவுமில்லாது தமது முன்னோரது பணிகளை நடாத்தி வருகின்றனர். இவர்களும் இவ்விழாவினைச் சிறப்புற இயக்குவதற்கு 1972- ம் ஆண்டில் ஒரு சாதனம் இயற்றியுள்ளனர். திரு கந்தையா அவர்களின் வாரிசு திருமதி இராசேஸ்வரி கலியாணசுந்தரம், வவைத்தியகலாநிதி திரு. சிவகுமாரன் அவர்களும், திரு. சரவணமுத்து அவர்களின் வாரிசாக, திருமதி. இராஜலட்சுமி -மகேஸ்வரன், பிரகதசுந்தரகுசாம்பாள்- கந்தையா, வைத்திய கலாநிதி திருமதி தனலட்சுமி, சரவணபவானந்தன் ஆகியோரும், இத் தேர்த் திருவிழா உபய தர்மகர்த்தர்களாகச் செயற்படுவதோடு, ஒவ்வொரு வருடமும் முறை முறையாகச் சங்கற்பங்கள் ஏற்று விழாவினைச் சிறப்பாக நடாத்த வேண்டுமென்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கந்தையா, சரவணமுத்து சகோதரர்கள் 1927 ஆம் ஆண்டில் இப் பஞ்சமகாரதோற்சவ உபயப் பொறுப்பை எற்று ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைகின்றனவெனில் அவர் தம் பெருமை சொல்லவும் ஆமோ?

இதே வேளையில் ஷண்முகருக்கும் பூரணத்துவம் கொண்டதோர் திருக்கோவிலையும் நிர்மாணித்து பெருமானை அங்கு எழுந்தருளுவித்து கும்பாபிஷேகமும் செய்விக்கின்றனர். ஆனந்தத் திருநடனத்துடன் மகா வல்லி, கஜவல்லி சமேத ஷண்முகப் பெருமான் வசந்த மண்டபத்திலிருந்து தமது புதிதான கருங்கற்திருக் கோவிலுக்குச் செல்லுங்காட்சியை என்வென்றுதான் வர்ணிப்பது!

யசுர் வேதகீதங்களை அந்தணர்கள் ஒலிக்க, ருத்திரகான இசையோடு வேதியர்கள் வெண்சாமரையிரட்ட, அஷ்ட மங்களங்களைத் தீட்சை பெற்ற வேதிய கன்னியர்கள் கையிலேந்திச் சூழ்ந்து வர, அருணகிரியார் திருப்புகழ்ப் பாடல்களை மாவையாதீனத்து இசையாளர் நாதஸ்வர மூலம் அஞ்சலி செய்ய, சங்கம், முரசு, சேமக்கலம், சல்லரி ஓசைகளோடு அறுமுகப் பரஞ்சுடரின் திருவடிகள் தாம் துணையென வாழும் அடியார்களின் முருக பஜனைக்கூட்டம் பின்வர எம்பெருமான் தொண்டர்களின் தோள்மேலேற்றப்பட்ட அழகிய சிங்காசனத்தில் வீற்றிருந்து, அழகிய மரகதமயிலுடன், பன்னிரண்டு திண்டோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும், கச்சைத் திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு அருள் விழியும், மாமுகங்கள் ஆறும், விரிகிரணம் சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும் எந்தத் திசையும் எதிர் தோன்ற வந்து அடியார் இடுக்கணெல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்து உல்லாசமாக உளத்திருந்து, அடியாருடன் கூட்டித் தோயும் பரபோகம் துய்ப்பித்து, சேய கடியேமுக்கும் பூங்கமலக் கால்காட்டி எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் காட்சியை வேறெங்கேனும் காண்போமே? முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காட்சியை என்னென்று தான் சொல்வது! இந்த வையகமே இதன் மூலம் புனிதமடைகின்றது. இது போன்ற, பெருந்தவப் பயனாக வந்ததொரு சந்தர்ப்பத்தை எமக்கு ஏற்படுத்திய மகான்களை, "நீங்கள் எங்கு தான் பிறவி எடுப்பினும் அங்கெல்லாம் உங்கள் தருமம் துணைதருவதாக" என நாம் ஆசீர்வதிப்பது போல, ஏனையோரும், கந்தையா, சரவணமுத்து சகோதரர்களுக்கு எக்காலமும் ஷண்முகப் பெருமானின் திருவருள் துணை நிற்கவேண்டுமெனப் பிரார்த்திப்பார்களாக.

பஞ்சரத உற்சவச் சிறப்பால் இந்நாடே செழிப்புறுகிறது. 1927 ம் ஆண்டில் இவ்வுற்சவத்தைப் பொறுப்பேற்ற போது, ஈழநாட்டிலே முதன் முதலாக 1789 ஆம் ஆண்டில் தென்னிந்தியா காரைக்குடி ஸ்தபதிகளால் அழகாக உருவாக்கப்பட்ட "முகோத்தர மகாரதமும்" வேறும் நான்கு பழமையான தேர்களுந்தான் இருந்தன. 1782- ஆம் ஆண்டில் உள்ளூர்ச் சிற்பிகளால் ஆக்கப்பட்ட ஷண்முகரது தேரானது, 1789 ம் ஆண்டிற்குப்பின் மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேராக 1952 ஆம் ஆண்டு வரை பவனிவந்தது. பின்னர் இத்தேர் கீரிமலைச் சிவாலயத்தின் உபயோகத்துக்கு விடப்பட்டது. 1945ம் ஆண்டிலிருந்து விக்னேஸ்வரர், முத்துக்குமாரர், மீனாட்சி சுந்தரேஸ்வரர் சுவாமிகளுக்குப் புதிய தேர்கள் உருவாக்கப்பட்டன. இத்தேர்த்திருப் பணிக்குப் பொதுமக்களிடமிருந்தும் நிதியுதவி வேண்டப்பட்டது. சகடைத் தேர்களாகக் காணப்பட்ட இத்தேர்களை மாற்றிப் புதுச் சிற்பத்தேர்களாக உருவாக்கிய பெருமை எமது கோவிற் சிற்பாசாரியர்களான மாவை திரு. செ. சுப்பிரமணியம், திரு. நடேசு ஆகியோர்க்ளைச் சாரும்.

1782 ஆம் ஆண்டில் ஷண்முகருக்கு உருவாக்கப்பட்ட புதிய "முகோத்தர மகாரதம்" 1955- ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதும் கந்தையா சரவணமுத்து குடும்பத்தினர் உடனடியாக எனது தந்தையாரைக் காரைக்குடிக்கு அனுப்பிவைத்து, இந்தியா்விற்றலை சிறந்த சிற்பியான சோமசுந்த ஸ்தபதியை அவரது ஆட்களுடன் இங்கே வரவழைத்து இவ் இரதத்தைத் தமது செலவிலேயே புதுப்பித்தனர். இவ்வேளையில் சோமசுந்தர ஸ்தபதி தனது மகன் லெட்சுமணனுக்கு எமது கோயிலில் வைத்துச் சிற்பசாஸ்திர வித்தியாரம்பத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் தனது தந்தையாரையும் விஞ்சிய சிற்பியாகி, இன்று அனலைதீவு ஐயனார் கோவிலில், ஈழமே பிரமிக்கத்தக்கதோர் "முகோத்திர மகாரதத்தை, எமது இரதத்தின் சாயலிலேயே செய்துள்ளார். இன்றும் இவ் இலட்கமண ஸ்தபதி மாவை முருகப் பெருமானின் திருவருள் நாடி அடிக்கடி இங்கு வருவது குறிப்பிடத்தக்கது. இன்று நான்கு தேர்களும் அழகு வாய்ந்ததோர் பெருங்காட்சியைத் தேர்விழாவினன்று தருவதனால், இந்நாடே மேன்மையடைகின்றது. இருப்பினும், ஐந்தாவது தேரான சண்டேஸ்வரருடைய தேர் அழகற்றதாயிருக்கும் குறை ஒன்றுண்டு. இக்குறை விரைவில் நீக்கப்பட வேண்டுமென்பது எமது பிரார்த்தனையாகும்.

தேர்த் திருவிழாவன்று அன்னதானம், வஸ்திரதானம், ஹிரண்யாதானம், அதிதி பூசை, கோபூசை, தேவ பூசை என்றெல்லாம் இவ்வுபயகாரர்கள் இயற்றுவது வழக்கமாகி விட்டது. இறைவனும் இவர்களுக்குத் திரவியம் வழங்கவழங்க இவர்களும் அதனை இறைவனுக்கே வழங்கி வருகின்றனர். அதிகாலையில், வேத சிவாகமங்கள் கூறும் அபிஷேக பூசைத் திரவியங்களால், இறைவனை அபிடேகித்து, விசேஷ பூசைகள் நடாத்தி, அதிமதுரமான சர்க்கரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் நிவேதனம் செய்து, பஞ்ச மூர்த்தி பஞ்சரதங்களில் எழுந்தருளச் செய்து, தமது தர்மங்களைக் சோரவிடாது நீடூழி நிலை பெற்று இயங்க வேண்டுமென்பதற்காகப் பெருந்தொகைப் பணத்தில் புதிதாக்கிய அன்னசத்திரம் போன்று விழங்கும் கீழ் வீதியிலுள்ள தமது மடத்தில் நைவேத்திய பூஜைகளை ஒழுங்கு செய்து, அங்கிருந்து உரிய உபசாரங்களோடு பஞ்சரதங்களை வலம் வந்து சங்கற்பங்களைக் கொண்டு விலையுயர்ந்த பட்டுவஸ்திரங்கள், சுகந்த மலர் மாலைகள் ஆகியவற்றை அணிவித்துத் தத்தமது நேர்த்திக் கடன்களைச் சமர்ப்பித்த பின் மகேசுவர பூசைகளை நடாத்துவர். அன்று மாலை இந்த இரதோற்சவத்திற் பங்குபற்றிய நாதஸ்வரகாரர்களும், பூமாலை சாத்தி அழகு செய்தவர்களுக்கும், தேரினை நெறிப்படுத்திப் பவனி செய்வித்த சிற்பிகளுக்கும், தேர்களை அலங்கரித்த ஊழியர்களுக்கும், இன்னும் யார் யாரெல்லாம் இவ்விழாவில் ஊழியஞ் செய்தனரோ அவர்கள் யாவர்க்கும் வஸ்திர தானம், ஹிரண்ய தானம் ஆகியன கொடுத்து உபசரிக்கும் மாண்புமிகு பெருந் தொண்டை நினையுந்தோறும் இத்தொண்டினை செய்வதற்கு நாம் எத்தனை தவம் இயற்ற வேண்டும் என்பது புலனாகும்.

கொல்லங்கலட்டி சங்கரசாணையர் என்றால் எல்லோருக்கும் இவரைத் தெரியும். எந்நேரமும் மாவை முருகனின் வாசலிலேயே நிற்பர். இவரது மூத்தவர் சங்கரப்பிள்ளையோ தர்மங்களை ஆற்றுவதற்குப் பின் நிற்கார். மிகுந்த குருபக்தி கொண்டவர். சிவாசாரியார் இடும் கட்டளை எதுவாயினும் அதனை குருவாக்கெனக் கொண்டு உடனியாற்றுவர். தனது சகோதரர்களான கந்தையா, சரவணமுத்து ஆகியோர்க்கு அவர்களாற்றும் திருத்தொண்டில் உறுதுணையாக நின்று செயலாற்றும் கர்மவீரர், இவரது நல்லறங்களை நாடு நன்கறியும், ஷண்முகரது பூரண திருவருளுக்காளாகிய இவர்களும், இவர்களது குடும்பமும் குறையெதுவுமின்றி இனிது வாழ வேண்டுமென்பதே எமது நித்திய பிரார்த்தனை.

இரதோற்சவத்தை யடுத்து ஷண்முகப் பெருமானின் அடுத்த உற்சவம் தைப்பூச விழாவாகும். திருக்கார்த்திகைத் திருநாளின் போதும் ஷண்முகப் பெருமானுக்கு விசேஷமான அபிஷேகமும் ஷண்முகார்ச்சனைகளும் நிகழும். மகர மாதத்தில் இடம் பெறும் இலட்சார்ச்சனை பூர்த்தியிலன்று மஞ்சத்தின் மீது பவனி வருவார். இலட்சம் உருப்பெறுவதற்காக வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளும் ஷண்முகர் பத்துத் தினங்கள் வரை அபிஷேக ஆராதனைகளைப் பெற்று இலட்சம் உருக்கொண்டு மஞ்சத்தின் மீதிருந்து அடியார்களை ஆட்கொள்ளும் காட்சி மகா அற்புதமானது. இந்த இலட்சார்ச்சனை உற்சவங்களைப் பலர் பங்குகொண்டு நடத்துகின்றனர். இவற்றோடு பலர், தத்தமது இஷ்ட காமிய சித்திகளைப் பெறுவதற்காக ஷண்முகர்க்குச் ஷண்முகார்ச்சனை நடாத்துவதும் வழக்கம்.

மாவையம்பதியிலே ஷண்முகப் பெருமானுக்கு நடாத்தப்படும் உற்சவங்களை நடாத்துவோரும், தரிசிப்போரும் உண்மையில் இக்கலியுக இடர்கள் நீங்கப் பெற்று பேரின்ப சுகத்தைப் பெறும் அதிக வாய்ப்புகளைப் பெறுவர் எனக்கூறி முருகப் பெருமான் குருவாய் வந்து எல்லோருக்கும் அருள வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்.

**நன்றி - மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சண்முகர் சம்புரோக்ஷண கும்பாபிஷேக மலர்- 1978**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலட்சுமி விரதம்

செல்வி. செ. றஜிகா,
திருமகள் அழுத்தகம்,
தூர்க்காபுரம் மகளிர் இல்லம்

விரதம் என்பது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதல் என நாவலர் கூறியுள்ளார். அப்படி கடைப்பிடிக்கப்படும் விரதங்களில் ஒன்றாக வரலட்சுமி விரதத்தை குறிப்பிடலாம். இவ்விரதம் பற்றி பவிஷ்யோத்தர புராணத்திலே சிறப்பாக கூறப்படுகின்றது. இந்த விரதம் அநேகமாக ஆடி மாத இறுதி வெள்ளிக்கிழமைகளில் அல்லது பௌர்ணமிக்கு முன் வரும் வெள்ளிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படுகிறது. திருப்பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் அமிர்தத்துக்காக கடைந்த போது பல பொருட்கள் கடலுக்குள் இருந்து வெளிப்பட்டன. அவ்வேளையில் சாயங்கால நேரத்தில் மகாலட்சுமியும் தோன்றினாள். அவள் தோன்றிய தினமே இது என்று பல புராணக்கதைகளில் கூறப்படுகின்றது.

வரலட்சுமி விரத மகிமையை பற்றி சில புராணக்கதைகள் மூலம் குறிப்பிடப்படுகின்றது. அந்த வகையில் ஒருசமயம் உமாதேவியார் சிவபெருமானை நோக்கி "ஐயனே பூவுலகில் சகல சௌபாக்கியங்களையும், புத்திர பாக்கியத்தையும் வழங்கக் கூடிய விரதம் எது? என்று வினாவியபோது அவர் உமாதேவியாருக்கு இந்த விரத மகிமையைக் கூறினார். முன்பு குண்டினம் என்ற நாட்டிலே சாருமதி என்ற சுமங்கலிப் பெண் இருந்தாள். அவள் நல்ல தெய்வ பக்தியும் தூய்மையும் ஆசார அனுஷ்டானமும் உடையவளாக இருந்தாள். ஒரு நாள் அவள் கனவிலே லட்சுமிதேவி தோன்றி இந்த விரதத்தை உபதேசித்து மறைந்தாள். அவளும் உடனே சகல பெண்களையும் அழைத்து இப் புதுமையை கூறினாள். குறித்த விரத நாளிலே சகல பெண்களுமாக நகர் முழுவதும் அலங்கரித்து முறைப்படி இவ்விரதத்தை அனுஷ்டித்து வரலாயினர். என்றுமில்லாதவாறு அங்கு சகல செல்வங்களும் பொலிந்து விளங்கின. வரலட்சுமி விரத பூசை முழுக்க முழுக்க பெண்கள் நடாத்துகின்ற பூசை. பெண்கள் கடைப்பிடிக்கும் விரதம் ஆகும்.

எந்தவொரு பூசையைச் செய்வதாக இருந்தாலும் முதலில் விநாயக வழிபாடு என்பது மிக மிக அவசியம். எனவே முதலில் கணபதியைத் தொழுது "இந்த வரலட்சுமி விரதத்தை தொடங்குகின்றேன்". என்று ஒப்புதல் வாங்கி விட்டு பூசையில் அமர வேண்டும்.

மாவிலை தோரணங்களால் அலங்கரித்த மண்டபநடுவிலே நெல், அரிசி முதலியவற்றை முறைப்படி பரப்பி, தாமரைக் கோலத்தை அதன்மேல் இட்டுக் கும்பத்தை அதன்மீது வைக்கவேண்டும். ஏனைய பூசைகளுக்கு நீர் நிரப்பிய கும்பம் வைப்பது வழக்கம். ஆனால் வரலக்ஷ்மி விரத பூசைகளுக்கு பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைக்கவேண்டும். பழம், வெற்றிலை, பாக்கு முதலியவற்றையும் லட்டு, தயிர், பசும்பால், தேன், நெய், கற்கண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுக்கட்டை மற்றும் மாதுளை, திராட்சை, மாம்பழம், விளாம்பழம் முதலானவற்றையும் நைவேத்தியமாக படைப்பது மிகவும் விஷேசமாகும்.

நல்ல கழிநூலிலே மஞ்சள் தோய்த்து ஒன்பது இழைகள் கொண்டதாக முறுக்கி எடுத்து ஒன்பது முடிச்சுகளை முடிந்து அந்தக் காப்பினைப் கும்பத்தில் வைப்பர். எட்டு வகையான செல்வங்களை வாரி வழங்குபவள் அன்னை லட்சுமி மஞ்சள், பட்டு உடுத்தி மஹாவிஸ்ணுவின் திருமார்பில் குடியிருப்பவள் லட்சுமிதேவி. மகாலட்சுமியை தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரியலட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, வித்யாலட்சுமி என அஷ்டலட்சுமிகளாக வழிபடுவர். அஷ்டலட்சுமிகளுடன் வரலட்சுமியையும் சேர்த்து ஒன்பது லட்சுமிகள் என்கிறது சாஸ்திரம் நூல். இதனாலே ஒன்பது நூல் இழைகளால் ஆன, ஒன்பது முடிச்சுக்கள் போடப்பட்ட நோன்புக் கயிறை பூசையில் வைத்து சங்கல்ப பூர்வமாக புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்க பூசைகளுடன் விஷேச உபசார பூசை, அங்கபூசை முதலியன செய்து ஒன்பது நாமங்களால் ஒன்பது முடிச்சுக்களையும் பூஜித்து அதனை வலது கையில் கட்டிக்கொள்ளவேண்டும். பொதுவாக விரதங்களுக்கு காப்பு கட்டும்போது ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டுவது வழக்கம். ஆனால் வரலட்சுமி பூசைக்கு மட்டும் (இது பெண்களுக்குரிய விரதம்) வலக்கையிலேயே காப்பு கட்டிக்கொள்ள வேண்டும். ஸ்லோகத்திலேயே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றது. காப்பினைக் கையில் கட்டும்போது செல்லும் ஸ்லோகம் இதுவே

**ஸர்வ மங்கல மாங்கல்யே ஸர்வபாப ப்ராணாஸினி**
**தோரகம் ப்ரதி க்ருஹ்ணாமி ஸப்ரீதா பவ ஸர்வதா**
**பத்னாமி தக்ஷிணே ஹஸ்தே நவசூத்ரம் சுப்ப்ரதம்**
**புத்ர பௌத்ராபி வ்ருத்திம்ச ஸௌபாக்கியம் தேஹிமேரமே.**

ஒன்பது முடிச்சுக்குளுக்கும் உரிய நாமங்களானவை கமலா, ரமா, லோகமாதா, விஸ்வஜனனீ, மகாலக்ஷமி, க்ஷீராப்திதநயா, விஸ்வஸ ராக்ஷிணீ, சந்தரஸஹோதரி, ஹரிவல்லபா இவை ஒவ்வொன்றுக்கும் முன்னால் “ஓங்கார”மும் பின்னால் “நம” என்றும் சேர்த்துப் பூசை செய்யவேண்டும். வரலக்ஷமி பூசைக்குரிய விஷேட அர்ச்சனை பொருள் “அறுகு” என்று புராணக் கதைகள் கூறப்படுகின்றது.

இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் குழந்தை பாக்கிய தடைகள் நீங்கி சற்புத்திர யோகம் உண்டாகும். ஜாதகத்தில் சுக்கிர தோஷம், களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம் நீங்கும், கணவன் மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி அன்யோன்யம் அதிகரிக்கும். இவ்விரதத்தை கடைப்பிடிப்பதால் பிரிந்திருக்கும் தம்பதிகள் ஒன்று சேர்வார்கள்.

இந்நாளில் அம்மன் கோவில்களுக்கு சென்று நெய்தீபம் ஏற்றி வணங்கி பக்தர்களுக்கு தயிர்சாதம், சர்க்கரை பொங்கல் பிரசாதம் கொடுக்கலாம். இயலாதோருக்கு தானம் செய்ய புண்ணிய பலன்கள் அதிகரிக்கும். மகாலட்சுமியை வழிபட்டு அவள் அருளால் சகல ஐஸ்வர்யங்களும் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிமாதம் அம்பிகை மாதம்

இந்துக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு ஆடி மாதம் வந்தாலே பண்டிகைகளின் அணிவகுப்பு ஆரம்பமாகிவிடும். ஆடிமாதப்பிறப்பு முதல் தை மாதம் மகர சங்கிராந்திவரை பலவித வழிபாடுகளிலும், கொண்டாடங்களிலும் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும்.

ஆடி மாதத்தைபல தெய்வங்களுடன் தொடர்புபடுத்தி நம் முன்னோர்கள் பல விரதங்களை மேற்கொண்டு வழிபட்டு வந்தனர். (அம்மன் வழிபாடு. ஆடிப்பூரம், ஆடிஅமாவசை, ஆடிக்கிருத்திகை) நாமும் அவர்களைப் போல் பெருமை வாய்ந்த ஆடி மாதத்தில் இறைவனைத் துதித்து மகிழ்வோமாக.

ஆடி மாதத்தை அடிப்படையாக வைத்துத்தான் பல சுப நிகழ்வுகளை முன்னோர்கள் நடத்தினர். ஆடி மாதத்தை சக்தி மாதம் என்றும் பண்டைய ஜோதிட நூல்கள் குறிப்பிட்டுள்ளன. எனவே இந்த மாதத்தில் விதை விதைப்பதை முன்னோர்கள் மேற்கொண்டனர். உத்ராயண காலத்தில் சூரியனில் இருந்து வெளிப்படும் கதிர்களை விட, தஷ்ணாயண காலத்தில் (ஆடி) சூரியனின் ஒளிக் கதிர்கள் விவசாயத்திற்கு உகந்தாக இருக்கும். ஆடி மாதத்தில் பகல் பொழுது குறைவாகவும் இரவு நேரம் நீண்டும் காணப்படும். காற்றும் மழையும் அதிகமாக இருக்கும்.

ஆடிமாதத்தில் வரும் வெள்ளிக்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஆடி செவ்வாய் தேடிக்குளி என்பது பழமொழி அதாவது செவ்வாய்க்கிழமை எண்ணெய் தேய்த்து தலை குளித்து, அம்மனை வழிபட்டு வந்தால் பெண்களின் மாங்கல்ய பலம் கூடும் என்பது நம்பிக்கை. ஆடிமாதம் என்றாலே அம்மன் கோயில்களில் திருவிழாவும், கூழ் ஊற்றுதலும் தீ மிதித்தலும் என்று களைகட்டும். ஆடி மாதம் என்பது அம்மனுக்கு உகந்தது என்றாலும் குறிப்பாக மாரியம்மன் வழிபாடு இன்னும் சிறப்பாகும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாரியம்மனுக்கு கூழ் ஊற்றி வீடுகளில் சிறப்பு பூசைகள் செய்வார்கள். ஆடி மாதம் என்பது விவசாயிகளுக்கும் உகந்த மாதமாகும். விவசாயிகள் தங்கள் பணிகளை இந்த மாதத்தில்த்தான் தொடங்குவார்கள்.

ஆடி மாத செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் அம்மன் கோவில் வழிபாடு தொடங்கிவிடும். இந்த மாதத்தில் செய்யவேண்டிய அம்மன் வழிபாடு குறித்து அறிந்து கொள்வோமே!

**ஆடி வெள்ளிக்கு அம்பாளுக்கு என்ன படைப்பது?**

ஆடி வெள்ளியன்று தவிட்டு அப்பம் செய்து அம்பாளுக்கு நைவேத்யம் செய்வது வழக்கம். தவிட்டை வெல்லத்துடன் சேர்த்து குழைத்து சப்பாத்தி மாவுபதத்திற்கு கொண்டு வரவேண்டும். இதை சப்பாத்தியை விட சற்று கனமான அளவிற்கு தட்டி தீக் கனலில் சுட்டெடுக்க (நான் எனப்படும் எண்ணெய் இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ந்த ரொட்டி சுடுவது போல) வேண்டும். ஆடிவெள்ளியன்று காலையில் சாப்பிடாமல் அம்பாள் பூசையை முடித்து விட்டு இந்த பிரசாதத்தை முதலில் சாப்பிடவேண்டும். கேரளாவில் இப்போது இந்த வழக்கம் உள்ளது. இங்கு இந்த அப்பத்தை "கனகப்பொடி" என்கின்றனர். தவிடு நார்சத்துடையது. இதில் வைட்டமின் "பி" உள்ளது. வெல்லத்தில் இரும்புச் சத்து உண்டு. ஆடி மாதத்தில் இந்த சத்து உடலுக்கு மிகவும் அவசியம் என்பதால் இந்த உணவை நைவேத்யம் செய்து அம்பாளின் அருள் கடாட்சமும் பெற்று சாப்பிடலாம்.

**மாரியம்மன் மருந்து**

மாரியம்மன் கோயில்களில் ஆடிச்செவ்வாய், ஆடி வெள்ளியன்று கஞ்சி வைத்து வணங்குவார்கள். இதை எப்படி வைப்பதென தெரிந்து கொள்ளுங்கள். "ஆடிகாற்றில் அம்மியே பறக்கும்." என்னும்போது. தூசு பறப்பது எம்மாத்திரம்? இதனால் இருமல் போன்ற நோய்கள் ஏற்படும். இதைத் தவிர்க்கவே மாரியம்மன் கோயில்களில் கஞ்சி வைக்கிறார்கள். இதை "ஆடிக்கஞ்சி" என்பர். அதி மதுரம், சீரகம், திப்பிலி, சின்ன வெங்காயம், திரிகடுகு, குன்னிவேர், உழிஞ்சை வேர், சீற்றாமுட்டி, கடலாடிவேர் ஆகியவை நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கும். இவற்றை அரை குறையாக தட்டியெடுத்து ஒரு வெள்ளைத்துணியில் கட்டி வைத்து கொள்ளவேண்டும். அரிசியை கஞ்சியாக வேக வைத்து அதில் துணியில் கட்டிய மருந்தை15 நிமிடம் போட்டு விடவேண்டும். பின்னர் இதைக் குடிக்கலாம். உடலுக்கு நல்லது இருமல் தொற்றுநோய் வராது கோயில் நிர்வாகங்கள் இதற்குரிய ஏற்பாட்டைச் செய்யலாம்.

ஆடி மாதத்தில் அம்பிகை வழிபாட்டை நாம் செய்து கொண்டிருக்கிறோம். அவள் பராசக்தியாக விளங்குகிறாள். பராசக்தி என்பதற்குரிய விளக்கத்தையும் நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். ஆதியில் ஒளி தோன்றியது. அந்த ஒளியில் ஆதிசக்தி தோன்றினாள். படைக்கும் கடவுளாக பிரம்மனையும் காக்கும் கடவுளாக விஷ்ணுவையும் அழிக்கும் கடவுளாக சிவனையும் படைத்தவள் சக்தியே. அந்த ஆதிசக்தியே கல்விக்குரிய கலைமகளாக, செல்வத்திற்குரிய அலைமகளாக வீரத்திற்குரிய மலைமகளாகவும் ஆட்சி செய்கிறாள். தாய்க்கெல்லாம் தாயாக இருக்கும் இந்த சக்தி உயர்ந்தவள் என்பதாலேயே மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தாயை முதன்மையாக வைத்தார்கள். அன்னையில்லமால் இந்தப் பிள்ளை இல்லை என்னும் வழக்கம் இதனால் தான் உண்டானது. இந்த ஆதிசக்தியை பராசக்தி என்றும் வழங்குவர். "பரா" என்றால் அளவிடமுடியாதது என்பது பொருள். அளவிடவே முடியாத சக்தியின் இருப்பிடமாக திகழ்வதால் அம்பிகை பராசக்தி எனப்பட்டாள். இவளே ஆலயங்களில் அருள் செய்கிறாள். ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு வடிவழகு கொண்டு வெவ்வேறு திருநாமங்களில் வழங்கப்படுகிறாள். மகாசக்தி உமையவளே மாரியாக, காளியாக, சங்கரியாக, துர்க்கையாக, முத்துமாரியம்மனாக, சக்தியம்மையாக கொலு வீற்றிருந்து உலக உயிர்களை தன் கடைக் கண்ணால் காத்துக் கரையேற்றுகின்றாள்.

ஒரு வருடத்தில் இரண்டு அயனங்களாக நம்முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள். ஆடி முதல் மார்கழி முடிய தட்சிணாயனம். இது தேவர்களுக்கு இரவாகும். தை முதல் ஆனி முடிய உத்தராயணம். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களுக்கு பகலாகும். ஆடிமாதமே தேவர்களின் மாலைக்காலம் (06 மணிமுதல் -08 மணிவரை) இந்த மாலை நேரத்தில் அனைத்து உயிருக்கும் அன்னையான அம்பிகையைத் துதித்து அவள் அருளை வேண்டுகிறது மனித இனம். ஆடி மாதத்தில் தான் பூமாதேவி அவதரித்தாள். பூமியில் வாழும் நமக்கு, மழை இல்லாவிட்டால் எதுவும் நடக்காது! மழையே நீ பொழிவாய்! என்று வேண்டுகிறது.

மனிதகுலம் அந்த வேண்டுதலின்படி அன்னையில் அருள் மழையாகப் பொழிந்து வெள்ளமாக ஓடியது. அதற்கு நன்றி செலுத்தும் வகையில் "ஆடி பதினெட்டு" என்று கொண்டாடுகிறார்கள்.

பதினெட்டு என்ற எண் "ஜய" த்தை அதாவது வெற்றியைக் குறிக்கும். மஹாபாரதத்தில் *18* பர்வங்கள் பகவத் கீதையில் *18* அத்தியாயங்கள் சபரிமலையில் *18* படிகள் நதிக்கரைகளில் *18* படிகள் முதலானவை எல்லாம் இந்த அடிப்படையிலேயே அமைந்தன. எனவே தான் காவிரி அன்னைக்கு "ஆடிப் பதினெட்டு" அன்று நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடுகின்றனர்.

**ஏகாதசி**

ஆடிமாதத்தில் அம்மன் கோயில்களில் குறிப்பாக மாரியம்மன் கோயில்களில் வேப்பஞ்சேலை அணிந்து நேர்த்திக்கடன் செலுத்துவது. தீமிதிப்பது, கூழ் வார்த்தல் போன்ற விஷேசமான வழிபாடுகள் நடைபெறுகிறது. ஆடி மாதத்தில் ஏகாதசி தேய்பிறை ஏகாதசி- சயிநி ஏகாதசி, ஆடி அமாவாசை தினத்தில் பித்ருக்களுக்கு (முன்னோர்களுக்கு) சிரார்த்தம் செய்வது மிகவும் நல்லது.

சூரியன் திசைமாறி சஞ்சரிக்கும் ஆரம்பக் காலம் ஆடி மாதம். ஆகையால் ஆடி அமாவாசை தர்பணத்திற்கு மிகவும் உயர்ந்த காலம். இதனால் பித்ருக்கள் மகிழ்ந்து சகல செல்வத்தையும் வழங்குவார்கள்.

குபேரனின் புஷ்ப கைங்கர்யம் செய்யும் பணியாளனான ஹேமமாலி என்பவன் தனது அழகான மனைவி மீது கொண்ட மையலால் வழக்கமான தனது பணியை மறந்து போய். குபேரனால் சபிக்கப்பட்டு குஷ்டரோக நோய் வந்து அவதியுற்றான். அப்போது ஆடி மாத தேய்பிறையில் வரும்யோகிநீ ஏகாதசி அன்று விரதம் இருந்து நோயிலிருந்து விடுபட்டான். பிறகு குபேரனிடம்சென்று தன் பணியைத் தொடர்ந்தான். இதுவே யோகிநீ ஏகாதசி எனப்பட்டது.

திரிவிக்ரமனாகத் தோன்றி மஹாபலியின் கர்வத்தை அடக்கிய மஹாவிஸ்ணு அவனைப் பாதாளத்துக்கு அனுப்பியவுடன் திருப்பாற்கடலுக்குச் சென்று பாம்பணையில் ஆடிமாத வளர்பிறை ஏகாதசியில்தான் சயனித்தார். எனவே. இது சயநீ ஏகதாசி எனப்பட்டது.

**ஆடிப்பூரம்**

கோயில்களில் ஆடிப்பூர உத்ஸவம் விசேஷமாக நடைபெறும். குறிப்பாக சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளுக்கு ஆடிப்புரத் திருவிழா விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிமாத வளர்பிறை துவாதசி தொடங்கி கார்த்திகை மாத வளர்பிறை துவாதசி வரையில் துளசியை வழிபட்டால் நீண்ட ஆயுள், ஆரோக்கியம், செல்வம் பெருகி வாழ்க்கை வளமாகும்.

**ஆடிப்பௌர்ணமி**

தட்சிணாயனம் எனும் தெற்குதிசை நோக்கி சூரியன் பயணிக்கத் தொடங்கும் கடக மாதமான ஆடி மாதத்தினைத் அம்மனுக்குரிய மாதமென்று போற்றுவர். இம்மாதத்தில் வரும் சிறப்பு நாட்கள் ஒவ்வொன்றும் திருநாட்களாகும். அந்த வகையில் ஆடிப்பௌர்ணமி மிகவும் போற்றப்படுகிறது. சந்திரனை மனோகாரகன் எனச் சொல்கிறது ஜோதிட வல்லுநர்களின் கருத்தாகும். எனவே இந்நாளில் இறை வழிபாட்டின் மூலம் நம் சிந்தனையை ஒருமுகப்படுத்தினால் மனோகாரகனான சந்திரன் சகல நன்மைகளையும் தந்தருள்வான் என்கின்றன வேத நூல்கள்.

சந்திரனுக்கு அதிபதி அம்பிகை ஆகவே. இந்நாளில் அம்பிகையை தரிசித்து வழிபாடுவதால் பூரண அருளும் ஆரோக்கியமும் கிட்டுவதுடன் மனதை அலையவிடாமல் ஒருநிலைப்படுத்தவும் உதவும். மனம் ஒருமைப்பட்டால் உடலில் குருதி சீராக ஓடும். இதன் விளைவால் படபடப்பு, கோபம், ஆக்ரோஷம் ஆகியவை நீங்கும். இதனால் மேன் மேலும் உடல்நலம் வளம்பெற்று ஆரோக்கியமாக வாழலாம் என தியான வழிகாட்டி நூல்கள் கூறுகின்றது.

**நன்றி: மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் கோயில் கும்பாபிஷேக மலர்.**

**பஞ்சகௌவியம்**

கோசலம், கோமயம், பால், தயிர், இவை பஞ்சகௌவியம் என்று கூறப்படுகின்றது. கோசலத்திற்கு வருணனும், கோமயத்திற்கு அக்கினியும், பாலிற்கு சந்திரனும், தயிருக்கு வாயுவும், நெய்யுக்கு விஸ்ணுவும், தேவதைகளென்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றன. செந்நிறத்த பசுவினிடத்துப் கோசலத்தையும் வெண்ணிறப் பசுவிடம் கோமயத்தையும் பொன்னிறப் பசுவினிடத்து பாலையும் நீலநிறத்த பசுவினிடம் தயிரினையும் கருநிறத்த பசுவினிடம் நெய்யினையும் கொள்ளின் நலம். இதை மந்திரப் பூர்வமாக கலந்து உண்டவன் சகல பாவதினின்று நீங்கிச் சுத்தமடைகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம்

குல. சபாநாதன்

முருகவழிபாட்டுக்குரிய திருப்பதிகளுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மும்மையானும் புகழ்பெற்றுத்திகழ்வது ஈழநாட்டின் தென்பாலுள்ள திருக்கதிர்காமம். இத்தலத்தின் பெயர்க்காரண ஆராய்ச்சி இன்னும் முடிந்தபாடில்லை. கதிரகாம என்னுஞ் சொல் **'கார்திகேய கிராம'** என்பதன் மரூஉ எனவும் யானை வாழ்கிராமமெனப் பொருள்படும் **கஜரகம** என்பதன் சிதைவெனவும் கதிரு(நச்சு)மரம் நிறைந்த கிராமம் (கதிருகொட என்பதுபோல) எனப் பொருள்படும் **கதிருகிராம** என்பதன் சிதைவெனவும் கொள்வர் சிலர். இன்னும் சிலர் இதனை தமிழ் சொல்லெனவே கொண்டு கதிர்காமம் என்பது கடவுள்தன்மையுடைய ஒளியும் அன்பும் (கதிர்- ஒளி, காமம்- அன்பு) கலந்து விளங்குமிடமெனவும் ஆறு கதிர்ப்பொறிகளால் பிறந்த ஆறுமுகன் வள்ளி நாச்சியார்மேற் காதல் கொண்டு மணம்புரிந்த இடமாதலில் கதிர்காமம் ஆயிற்று எனவும் கூறுவர். இன்னுஞ்சிலர் கதிரங்கருங்காலி எனும் பிங்கல நிகண்டுச் சூத்திரத்தை எடுத்துக்காட்டி கதிரமரம்(கருங்காலி மரம்) நிறைந்த கிராமமாதலால் இப்பெயர் ஏற்பட்டதென்பர். **கதிரகாமம்** என்பது சிங்கள மொழிச் சொல்லின் மருஉவாய் தமிழ்மொழியின் கண் திசைச்சொல்லாய் பிற்காலத்து வழக்கில் வந்ததென்பதே எமது கொள்கை. அக்கொள்கைக்கேற்ப கதிரு மரங்களையுடைய ஊர் எனப்பெயர்க்காரணம் கூறுதலே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

ஏமகூடம், பூலோக கந்தபுரி, காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்தி வாசம், வில்வகானனம், சகலசித்திகரம், அகத்தீயப்பிரியம், பிரமசித்தி, அவ்வியர்தமூர்த்தம், சித்தகேத்திரம், கதிரை, ஜோதிஷ்காமம், என்பன கதிர்காமத்திற்குப் பல நூல்களிலும் வழங்கப்பட்டுள்ள பெயர்கள் கதிர்காம சுவாமி, கதிரைநாயகன், கதிரைவேலன், மாணிக்கசுவாமி, கந்தக்கடவுள், ஆறுமுகப்பெருமான், பரஞ்சோதிப்பெருமான், சிதாகாயநாதன், அவ்வியர்தமூர்த்தி என்ற திருநாமங்கள் கதிர்காம கடவுளுக்கு வழங்கப்படுவன.

**புராணவரலாறு**

முருகவேள் சூரபன்மனைச் சங்கரிக்கும் நோக்கொடு எழுந்தருளியபோது கதிர்காமத்தையடைந்து மாணிக்க கங்கையருகிற் பாசறையமைத்து வீற்றிருந்தார் என்றும், அவ்விடம் ஏமகூடம் எனப்பட்டது என்றும் பின்னர் சூரபன்மனைவென்று வாகைசூடி மீண்டபொழுது கதிர்காமக்கிரியில் நவகங்கா தீர்த்தமுண்டாக்கிச் சிந்தாமணியாலயத்தில் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தார் என்றும் புராணம் கூறுகின்றது. வள்ளிநாயகியாரைக் கண்டு காதலித்து மணமுடித்த இடம்கதிர்காமமென்பது ஐதிகம். முருகப்பெருமான் முதலில் தெய்வானையம்மையாரை மணமுடித்து பின் திருத்தணிமலைக்கருகில் உள்ள வள்ளிமலையில் வள்ளிநாயகியாரை மணம்புரிந்து அதன்பின்னர் இருவரையும் நோக்கி தாம் விரும்பும் தலம் கதிர்காமமெனக்கூறி அவர்களுடன் கதிர்காமக்கிரியை அடைந்து சிந்தாமணியாலயத்தில் எந்நாளும் அன்பர்கள் வழிபட்டுய்யுமாறு வீற்றிருக்கின்றார் எனத் தஷிண கைலாச புராணம் கூறும். "பிள்ளையார்மலை, வீரவாகுமலை, தெய்வானையம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை, வள்ளியம்மை மலை ஆகிய மலைகளின் நடுவே சோமன், சூரியன் அக்கினியென்னும் முச்சுடர்களின் சோதிபெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவது கதிரைமலை என்றும் "அம்மலை சிகரநடுவில் அநேக கோடி சூரியப்பிரகாசம் பொருந்தி விளங்கும் சிந்தாமணியாலயத்தில் நவரத்நமயமான சிங்காதனத்தில் வள்ளிநாயகி தெய்வானையம்மை சமேதராய் கதிர்காம கிரீசர் எழுந்தருளியிருக்கிறார்" இப்புராணம் கூறும். மேலும் கதிர்காம நகரச்சிறப்பினையும் இப் புராணம் கீழ்க் காணுமாறு குறிப்பிடுகின்றது. "கதிர்காம நகரம் முக்கோணவடிவமான வீதியையுடையது. அந்நகரத்தின் நடுவிலே பவளத்தூண்கள் நிறுத்திப் பொன்னால் இயற்றி இரத்தினங்கள் இழைத்த திவ்வியமாகிய சோதி மண்டபம் (சுவாமி சந்நிதி) ஒன்றிருக்கின்றது. அம்மண்டபத்தின் நடுவில் இந்திரநீலமணியினாற் செய்து பிரகாசமும் அழகும் பொருந்திய சிங்காசனத்தின்மேலே தெய்வானையம்மையார் வள்ளியம்மையார் என்னும் இரு சக்திகளோடு ஞானசக்தி வடிவாகிய வேற்படையைத் தாங்கி கிருபா சமுத்திரமாகிய கதிர்காமநாதர் விளங்குகின்றார். அச்சோதி மண்டபத்தின் எதிரிலே எல்லா இலக்கணமும் வாய்ந்த வள்ளியம்மை மண்டபம் இருக்கின்றது. அதன் அருகிலே மேன்மை பொருந்திய சமாதியோக மண்டபம் ஒன்றிருக்கின்றது. விநாயகருக்கும் பரமசிவனுக்குமுரிய வேறுமண்டபங்களும் அங்குள்ளன. வீரவாகு முதலான வீரருக்குரிய மண்டபங்களும் இருக்கின்றன. கதிர்காம நகரத்தருகிற் புண்ணிய நதியாகிய மாணிக்க கங்கை பாய்ந்துகொண்டிருக்கும்.

**சரித்திரம்**

புராணங்களிற் பலவாறாகக் கூறப்பட்ட போதிலும் கதிர்காமஷேத்திரத்தின் புராதனமும் பெருமையும் சரித்திரங்களிற் காணப்படுகின்றன. யாழப்பாண வைபவமாலையிலும் மகாவம்சம் என்ற சிங்கள சரித்திரத்திலும் கதிர்காமத்தைப் பற்றிய உண்மைக் குறிப்புகள் காணப்படுகின்றன.

சீதாபிராட்டியாரைத்தேடி இலங்கைக்கு வந்த அனுமான் கதிர்காமப் பெருமானை வணங்கிச்சென்றான் என்பது சில சரித்திராசிரியர் கொள்கை. கி.மு 500ம் ஆண்டளவில் விஜயன் இலங்கைத் தீவில் கதிரையாண்டவருக்கு ஒரு கோயிலமைத்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறும். சிங்களரின் சரித்திர நூலாகிய மகாவம்சத்தில் தேவனம்பியதீசன் ஆட்சிக்காலத்தில், அசோக மன்னனது அருந்தவப்புதல்வி சங்கமித்தை வெள்ளரசுடன் அநுரதபுரியை அடைந்த பொழுது, இலங்கை அரசனுக்கு அடுத்தபடியாகக் கஜரகாமத்துப் பிரபு குறிப்பிடப்படுகின்றான். இவ்வரசின் கிளையொன்று இப்பிரபுவால் கதிர்காமத்திற்கு கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் நாட்டப்பட்டதாகவும் அந்நூல் கூறும். இப்பொழுது கதிர்காமக் கோயில் வீதியில் காணப்படும் வெள்ளரசு இதனடியிற் தோன்றியதெனக் கருதுவர். கி.மு. 300ம் ஆண்டளவில் மகாநாகன் என்னும் அரசனாற் கட்டப்பெற்ற கிரிவிகாரையென்னும் பௌத்த விகாரமொன்று கதிர்காமக்கோயிலுக்குச் சிறிது தூரத்திலிருக்கின்றது. இதனைச் சாதாரண மக்கள் சூரன் கோட்டை என்று வழங்குவர்.

துட்டகைமுனு எனும் சிங்களவரசன் எல்லாளன் எனும் புகழ்பெற்ற தமிழரசனை வெல்லுதற்குரிய ஆற்றலைத் தமக்களிக்கவேண்டுமெனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பிற் கதிரையாண்டவர் ஆலயத்தைக் கட்டுவிப்பதாகவும் விரதம் பூண்டு அக்கடவுள் அருள் பெற்றுத் தன் பகைவனை வென்றதால் தான் கூறியபடியே கி.பி 101-ம் ஆண்டளவில் ஆலயத்தைக் கட்டியதாகவும் "கந்தஉபாத" எனுஞ் சிங்கள நூல் கூறுகின்றதெனச் சேர் பொன். அருணாசலம் துரையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இலங்கை சோழர் ஆட்சிக்குட்பட்டபொழுது சிங்கள அரசனாகிய ஐந்தாம் மகிந்தனும் அவன் மனைவிமாரும் சிறைப்படுத்தப்பட்டனர். இங்ஙனம் சிறைப்பட்ட அரசனின் வழித்தோன்றலாய மானவர்மன் எனுஞ் சிறந்த கல்வியாளன் முருகப்பெருமானின் அருள்பெற வேண்டிப் பல்லாண்டுகளாகத் தவஞ் செய்து தனது கண்மலரையே அர்ச்சித்து ஈற்றில் அவன் அருளைப்பெற்றுத் தனது சாதியினரை வருத்திய சோழரை இவ்வூரினின்றும் இந்த மானவர்மனின் சந்ததியார் துரத்த முடிந்ததென மகாவம்சம் விரிவாகக் கூறுகின்றது. இவன் சிறந்த முருகப் பக்தன் என்பதையும் இந்நூல் கூறாமற் கூறிவிட்டது.

இப்பொழுது காணப்படும் கதிர்காம ஆலயம் கி.பி. 1581-ம் ஆண்டளவில் அரசு புரியத்தொடங்கிய முதலாம் இராசசிங்கனாற் கட்டப்பெற்றதென்பது திரு. வ. குமாரசுவாமியவர்கள் கருத்து இவன் பௌத்த சமயத்தை அலட்சியஞ் செய்து, சைவசமயத்தைக் கடைப்பிடித்தொழுகி "பைரவ ஆண்டி" கோயிலைக் கட்டுவித்தான் என மகாவம்சம் கூறுகின்றது. ஆனால் இப்பொழுது காணப்படும் ஆலயம் கி.பி. 1634-ம் ஆண்டளவில் அரசாண்ட இரண்டாம் இராசசிங்கனாற் கட்டப்பட்டதென்பதே சரித்திராசிரியர் துணிபு.

**கதிர்காம க்ஷேத்திரம்**

ஈழநாட்டின் தென்பாகத்தில் ஊவா மாகாணத்து புத்தல் பிரிவிலுள்ள தியனகம எனும் காட்டில் மாணிக்க கங்கை அல்லது பரப்ப ஓயாவின் இடது கரையில் கதிர்காமக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார். இக் கோயில் புத்தலிலிருந்து 26 மைல் தூரத்திலும், அம்பாந்தோட்டையிலிருந்து 59 மைல் தூரத்திலும், திசமஹாராமாவிலிருந்து 10½ மைல் தூரத்திலும் உள்ளது. கதிர்கம க்ஷேத்திரத்தில் அநேக கோயில்கள் இருக்கின்றன. கதிர்காமநாதன் சந்நிதி தெற்குநோக்கியும் வள்ளியம்மன் சந்நிதி வடக்கு நோக்கியும் இருக்கின்றன. தனது புதிய மனைவியை எப்பொழுதும் பார்த்தவண்ணம் இருக்க வேண்டுமென்ற விருப்பினாற் கதிர்காமநாதர் இக் கோயில்களை இங்ஙனம் அமைத்துக்கொண்டார்போலும். இச் செயலைக் கண்ட தெய்வயானையம்மையார் தமது கோயிலைக் கிழக்கு நோக்கியமைத்துக்கொண்டார். வள்ளியம்மையாருக்கு அடிமை பூண்ட முத்துலிங்கசுவாமி மாணிக்க கங்கையைக் கடந்துவரும் அடியார்களை அன்புடன் உபசரித்து முருகனிடம் ஆற்றப்படுத்தும் கருத்துடன் மேற்குத் திசையை நோக்கித் தமது கோயிற் சந்நிதியை அமைத்துக்கொண்டார். கதிர்காம க்ஷேத்திரத்திலுள்ள கோயில்களை நான்கு வகுப்பாக வகைப்படுத்தலாம். முதலாவது வகுப்பில், (01)உருகுணை மகா கதிர்காம ஆலயம் அல்லது சுவாமி சந்நிதி. (02)வள்ளியம்மன் கோயில். (03) பத்தினி கோயில் கண்ணகியம்மன் கோயில் இவை மூன்றும் அடங்கும். இம் மூன்று கோயில்களும் பௌத்தமத ஆலய பரிபாலனச் சட்டத்தின்படி பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் (01) மாணிக்கப் பிள்ளையார் கோயில். (02) தெய்வயானை அம்மன் கோயில். (03) வயிரவர் கோயில். (04) முத்துலிங்கசுவாமி கோயில். (05) செல்லக்கதிர்காமம் அல்லது பழைய கதிகாமம். இது சுவாமிசந்நிதியிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ளது. இதன்கண் இப்பொழுது ஒருபிள்ளையார் கோயிலுண்டு. (06) கதிரைமலை இவை ஆறும் அடங்கும். இவை பெரும்பாலும் பாபாக்களின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன. மூன்றாவது வகுப்பில் (01) கிரிவிகாரையும் (02) பெருமாள் கோயிலும் அடங்கும். இவை பௌத்த குருமாரின் பரிபாலனத்தில் இருக்கின்றன. நான்காவது வகுப்பிற் சோனகருடைய பள்ளிவாசல் அடங்கும் இவற்றைவிட வேறு சில சிறு கோயில்களும் காலத்துக்குக்காலம் கட்டப்பெற்றுள்ளன.

கதிர்காமநாதன் தேவாலயத்திற் பெரிய கோபுரத்தையாவது விமானத்தையாவது யாம் காணமுடியாது. கர்ப்பக்கிரகமும் சிறு மண்டமும் கொண்டதே கோயில் எனப்படும். கர்ப்பக்கிரகத்தின் வாசலில் திரையிடப்பட்டிருக்கிறது. வேளி மண்டபத்தில் நின்றே மக்கள் வழிபடவேண்டும். கதிர்காம வேலருக்குப் பூசை செய்பவர்களைக் கப்புராளைமார் என்றழைப்பது வழக்கம். கப்புராளைமார் இக்கோயிலிற் பூசை நடத்தும் முறையும் இக் காலச் சைவமுறைக்கு வேறுபட்டதாகும். வள்ளிமணாளனுக்குப் பூசை நிகழும்பொழுது அவனை வரவேற்பதற்கு ஆலாத்திப்பெண்கள் நாடொறும் வந்து ஆலாத்தி யெடுப்பார்கள். கோயிலுக்கு வெவ்வேறு தொழில் புரியும் மேளகாரர், ஜோதிடர் முதலிய பலருளர். இவர்களுக்கெல்லாம் மானியம் விடப்பட்டிக்கிறது.

கப்புராளைமார் தம் வாயை மஞ்சள் துணியினாற் கட்டி, அமுதினை உள்ளே காவிச்சென்று வைத்தபின்னர் வெளியேவந்து திரைச்சீலை முன்பாக நின்று ஓங்காரவடிவாகக் கைகளிரண்டையும் கூப்பி வழிபாடியற்றுகின்றனர். "ஒருவன் தான் வேறு எதைத்தான் செய்ய முடியாதிருத்தாலும், தன் இரு கைகளையும் சிரசின் மேற் குவித்து வழிபடுவதால், அவனுடைய உருவம் வேலின் உருவத்தை ஒக்கும், அப்பொழுது அவன் வேலாகி, வீரன் கை வேலாகிவிடுவான்" என்று, கதிர்காம தலத்தை விய வருஷப்பிறப்பன்று தரிசித்த திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஜயரவர்கள் கூறியதும் இவ்விடத்தில் நினைக்கத்தக்கது.

திருவிழாக்காலங்களிற் சந்நிதானத்துள் இருந்து ஏதோ ஒரு வஸ்துவைக் கப்புராளைமார் பெரிய வஸ்திரத்தால் மூடி ஒருவருக்கும் அது இன்னதெனத் தெரியாவண்ணம் கொணர்ந்து யானை மீதுள்ள பெட்டியினுள் வைத்து இறுகக் கட்டிவிடுகின்றனர். கப்புராளைமார் தமக்குள் ஒருவரைத் தெரிவுசெய்து அவரைச் சுவாமிக்கப்புராளை யென்றழைப்பது வழக்கம். இந்த சுவாமிக் கப்புராளையே யானைமீதுள்ள பெட்டியை மிகக் கவனமாகப் பிடித்துக் கொள்வார். இந்த மறை பொருளைக் கப்புராளைமாரும் பயபக்தியுடனே தான் ஏற்றி இறக்குகின்றனர். இப்பொருளே சுவாமி சந்நியிலிருந்து வள்ளியம்மன் சந்நிதிக்கு யானைமீதமர்ந்து உலாப்போவது. அடியார்கள் தம் தலைமேல் அல்லது கைமேற்கொண்டு செல்லும் விபூதிச் சட்டியில் ஏற்றிய கர்ப்பூர வெளிச்சம் கதிர்காமத்தில் இரவினைப் பகலாக்க, ஊதுபத்திகளின் நறுமணம் பரவ, பல்லாயிரக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் "அரோஹரா" என்று கதறிக் கண்ணீர் சொரிய, கதிர்காமக்கடவுள் உலாப்போகுங் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். முத்துலிங்கசுவாமி அவர்கள் அமைத்த இயந்திரம் அடங்கிய பெட்டியே விழாக்காலத்திற் பவனி வரும்போது யானைமேல் ஏற்றிச் செல்லப்படுகின்ற தெனக் கொள்வாருமுளர். இதனை முத்துலிங்கசுவாமியவர்கள் சரித்திரத்தைக் கூறுமிடத்து விளக்குவாம்.

ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளை வழிபடுமுறையே, அஃதாவது, கந்தழி வழிபாடே கதிர்காமத்தில் உண்டென்பது ஆராய்ச்சியாளர் சிலர் துணிபு. கந்தழி வழிபாடெனிற் கோயிலமைத்தல் அவசியமின்றாகிவிடும். மேலும், வேட்டுவர் கந்தழி வழிபாடாற்றும் நுண்மதியுடையரோவென்பதும் இங்கு ஆராயத்தக்கது. அனற்பிழம்பு வடிவமே இங்குக் கர்ப்பூர தீபமாக இன்றும் நிலைத்து நிற்கின்றதெனக் கொள்ளற்கிடமுண்டெனினும், துணிந்துகூற முடியாது.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் போக்கினை நோக்குமிடத்து, மாணிக்கத்தாற் செய்த விலைமதித்தற்கரிய திருவுருவம் ஒன்று இருந்திருத்தல் கூடும் எனக் கருத இடமுண்டு. அன்றியும் கதிர்காமத்தைச் சென்று தரிசித்த டொக்டர் டேவி அவர்கள், பெருங்கலகம் நிகழ்ந்தகாலத்திற் கதிர்காமத்திலுள்ள திருவுருவம் மறைக்கப்பட்டு இன்னும் காட்டிற் கிடக்கின்றதெனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதனாலும் மூலஸ்தானத்தில் விக்கிரகம் ஒன்றிருந்ததென்பதும், அது மிகவும் விலையுயர்ந்ததென்பதும் பெறப்படும். திருக்கோயிலினுள்ளே தங்கத்தாற் செய்த ஆறுமுகவேலவர் திருவுருவம் ஒன்று மாசுபடிந்து வஸ்திரத்தால் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றதெனச் சிலர் கருதுகின்றனர். இஃதுண்மையாயின் சிங்களர் இக்கோயிலின் ஆட்சியைக் கைப்பற்ற முன்னர், தமிழரே சைவமுறைப்படி திருவுருவம் அமைத்து வழிபாடாற்றி வந்தனர் என்பதும், இத் திருவுருவத்திற்கு வழிபாடாற்றும் முறை சிங்களவருக்குத் தெரியாமற் போகவே, இக் கோயிலின் வாயிலை மறைத்துத் திரைச் சீலையிட்டனர். என்பதும் வலியுறும். ஆறுமுகவேலவர் வள்ளி தெய்வயானையுடன் அடியார்க் கருள்புரியும் காட்சியே திரைச் சீலையில் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. இத்திரைச் சீலை எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு பொழுதும் அகற்றப்படுவதில்லை.

**கோயில் திருவிழாக்கள்**

கதிர்காமக் கோயிலில் வருடந்தோறும் நான்கு திருவிழாக்கள் நடைபெறும். முதற்றிருவிழா சித்திரை வருடப்பிறப்புத் தினத்தன்று நடைபெறும். இரண்டாவதாக ஆனி அல்லது ஆடியில் பந்தற்கால் நடும் திருவிழா நடைபெறும். அஃதாவது ஆடி அல்லது ஆவணியில் நடைபெறவிருக்கும் திருவிழாவுக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே கந்தசுவாமியார் வள்ளிநாய்ச்சி யாரை மணமுடித்தற்கு வெண்டிய பந்தல் அமைப்பதற்குக் கன்னிக்கால் நடும் திருவிழா நடைபெறும். மூன்றாவதாக ஆடி அல்லது ஆவணியில் 15 அல்லது 16 நாட்களுக்குத் திருவிழாவும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். நான்காவதாக, கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா நடைபெறும்.

**நன்றி: இலங்கையின் புராதன சைவாலயங்கள் - கதிர்காமம், 1947**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமாவாசை விரத மகத்துவம்

கலாநிதி. குமாரசாமி சோமசுந்தரம்

விரதம் என்பது தவம், நோன்பு என்றும் கூறுவர். சைவமக்கள் தெய்வங்களை நோக்கியும், பிதுர்கள் எனப்படும் தென்புலத்தாரை நோக்கியும், விரதங்கள் அனுட்டிக்கின்றனர். விரதம் என்பது பிரதிக்ஞையும் ஆகும். விரத காலங்களில் விரதமனுட்டிப்போர், விதிக்கப்பட்டவ்றைச் செய்தலும் விலக்கப்பட்டவற்றைச் செய்யாது தவிர்த்தலும், அறம் எனக்கொண்டு கடைப்பிடித்து ஒழுகுதல் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றுவதாக சங்கல்பம் செய்து விரதம் அனுட்டித்தல் விரத நியதியாகும்.

அமாவாசை, பூரணை ஆகிய புனித தினங்களில் அமரத்துவம் அடைந்து விட்ட தந்தை, தாய் ஆகியோரைக் குறித்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக, அவர்களின் புத்திரர்களால், விரதம் அனுட்டிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் வருகின்ற அமாவாசை, பூரணைத் தினங்களில் இவ்விரதங்களைத் தவறாது அனுட்டித்து வருதல் பிள்ளைகளின் கடமையாகும். பிதுர் வழிபாட்டில் இவ் விரதங்கள் ஓர் அங்கமாகும். அவ்வாறே ஆண்டு தோறும் தந்தை தாயார் இறந்த தினங்களில் அவர்களின் பாவவினைகளை நீங்குதற்பொருட்டும் அவர்களின் ஆத்மா முத்தியின்பம் அடைதற் பொருட்டும் சிராத்தம் செய்தல் மூலம் பிதுர்க்கடன் நிறைவேற்றப்பட வேண்டும். சிரத்தையோடு செய்யப்படுவது சிரார்த்தம். திவசம் என்று திதி என்றும் இது கூறப்படும் வழக்கம் உள்ளது. புரட்டாதி மாதத்தில் வருகின்ற மஹாளய பட்சத்திலும் ஒரு நாள் விரதமிருந்து மஹாளய சிரார்த்தம் செய்ய வேண்டியது புத்திரர்களின் கடமையாகும்.

தை, ஆடி மாதங்களில் வருகின்ற அமாவாசையும், சித்திரை மாதத்தில் வருகின்ற பூரணையும் சிறப்புடையன என்று சைவ ஆகமநூல்கள் கூறுகின்றன. அவரவர் தந்தை தாயார் இறந்த திதிகளில் சிராத்தம் செய்யத் தவறிவர்கள் ஆடி அமாவாசையன்று இறந்த தந்தையை நோக்கியும், சித்திரா பூரணையன்று இறந்த தாயின் பொருட்டும் சிராத்தம், பிண்டதானம், தருப்பணம் என்பவற்றை நிகழ்த்தும் வழக்கம் உள்ளது.

இவ்விரதங்களை அனுட்டிப்பவர்கள் ஆசாரசீலர்களாக விரத நியமங்களைப் பேணி குறித்த தினங்களில் உபவாசம் இருந்தும், அவ்வாறு இருக்க இயலாதவர் பகலில் ஒரு பொழுது புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தோய்த்துலர்ந்த உடைகளை அணிந்து தூயராய் பிதுர் தருப்பணம், பிண்டதானம்,க சிராத்தம் என்பவற்றை குருவின் வழிநடத்தலில் செய்தும் ஆத்மசாந்திப் பிராத்தனை பஞ்சபுராணம் ஓதல் என்பவற்றில் பங்குபற்றியும் இறைவனை வழிபட்டும் அந்தணர்களுக்குத் தானமும் உறவினர் விருந்தினர் ஏழைகள் ஆதரவற்றோர் ஆகியோருக்கு அன்னதானமும் வழங்கியும் அவர்களுடன் அமர்ந்து போசனம் செய்தும் விரதத்தை நிறைவு செய்வர். "புத்" என்ற கொடிய நரகத்தில் வீழ்ந்து விடாது. பெற்றோரை காப்பாற்றுபவன் புத்திரன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அமாவாசை விரத மகத்துவம் பற்றி நோக்குவோம். இந்துக்கள் ஒரு வருடத்தை இரண்டு அயனங்களாகப் பிரித்துள்ளானர். தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையும் உள்ள ஆறு மாதங்கள் உத்தராயணகாலம் எனப்படுகிறது. சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சஞ்சரிக்கும் காலப்பகுதி இதுவாகும். தேவர்களுக்கு பகற்காலம் உத்தராயணம். ஆடிமுதல் மார்கழி வரையுள்ள ஆறுமாதங்கள் தட்சணாயணகாலம். சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய திசையில் சஞ்சாரம்செய்யும்காலம் தேவர்களுக்குத் தட்சணாயனம் - இரவுக்காலம் என்பர்.

ஆடி மாதம் தட்சணாயனத் தொடக்கமாதம் என்பதால் தெய்வ வழிபாடு பிதுர் வழிபாடு செய்வதற்குச் சிறப்பான மாதம் எனக் கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் திருமணம், வீடு குடிபுகுதல் போன்ற உலகியல் சார்ந்த விழாக்கள் நிகழ்வுகள் என்பன ஆடி மாத்தில் இடம் பெறுவதில்லை.

ஆடிப் பிறப்பு, ஆடி அமாவாசை, ஆடிக்கார்த்திகை, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆடிப்பெருக்கு, ஆடிவேல்விழா, ஆடிவெள்ளி ஆகிய திருநாட்கள் சமய ஆன்மிக ரீதியாக இந்துக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. கடவுள் வழிபாடு, பிதுர் விரதம் அனுட்டித்தல், தானதர்மங்கள் செய்தல் என்பவற்றில் ஈடுபாடுவர்.

சூரியனும் சந்திரனும் ஒரே பாதையில் பூமிக்கு நேராக வரும் பொழுது ஏற்படுவது அமாவாசைத்திதி. சூரியனும் சந்திரனும் ஒரே இராசி வீட்டிற்குள் நிற்கும் காலம் என்று சோதிட நூல் கூறும். “அமா” என்றால் ஓரிடத்தில் பொருந்தியது அல்லது சேர்ந்தது என்று பொருள் கொள்வர். “வாசி” என்றல் சாதகமான அல்லது வாய்ப்பான என்னும் கருத்தினையுடையது. எனவே ஒரே இராசியில் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்து அல்லது பொருந்தி உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்படுகிறது. பின்னர் அமாவாசையாக மருவியுள்ளது. மாதத்தில் ஒருமுறை இந்நிலை உண்டாகி அமாவாசை வருகின்றது.

ஒவ்வொர் அமாவாசைத் தினமும் பிதுர் வழிபாட்டிற்கும் பிதுர்க்கடன் நிறைவேற்றுதலுக்கும் மிக ஏற்ற புண்ணிய நாள்

**‘தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை’**

என்கிறது. தமிழ் மறை இல்லறத்தார் ஆற்றவேண்டிய ஐந்து முக்கிய கடமைகளுள் ஒன்று. தென்புலத்தார் ஓம்புதல் ஆகும். பிதுர்களைத்தான் தென்புலத்தார் எனக் கூறப்படுகிறது. சூரிய மண்டலத்திற்கு அப்பால் உள்ள தென்திசை மண்டலத்தில் பிதுர்கள் உறையும் பிதுர்லோகம் உள்ளது. பிதுர்களை **‘தென்புலத்தார்’** என்று அழைப்பது தமிழ் மரபு.

தென்புலத்தார் வழிபாடு, பிண்டம் போடுதல், எள்ளும் தண்ணீரும் இறைத்தல் என்பன பண்டைய தமிழ்மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. இவையொன்றும் அந்நிய கலாசாரம் அல்ல என்பது கருத்திற்கொள்ளற்பாலது. அமாவாசை, பூரணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் தென்புலத்தார் வழிபாட்டிற்குரிய புனித தினங்களாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. தென்புலத்தார் கடன்களை நிறைவேற்றத் தவறினால் வாழ்க்கையில் துன்பங்கள், துயரங்கள், இயற்கை அனர்த்தங்கள், நோய்கள், பிணிகள், விபத்துக்கள், துர்மரணங்கள், குடும்பத்தில் குழப்பங்கள், திருமணத்தடைகள், மணமுறிவுகள், தொழில்களில் வருவாயின்மை, பணக்கஷ்டம், எதிர்பாராத பொருள் மற்றும் தொழில் இழப்புக்கள் என்பன தவிர்க்க முடியாதனவாகிவிடும். இதை உணர்ந்து பிதிர்க் கடமைகளை முட்டின்றி நிறைவேற்றி வரவேண்டியது தமது நலத்திலும் குடும்பநலத்திலும் ஒட்டுமொத்தமாக வாழ்க்கை நலத்திலும், அமைதியிலும் சிரத்தைகொள்பவர்களின் முக்கிய கடமையாகும்.

ஆடி அமாவாசையன்று தந்தையை இழந்தவர்களும், சித்திரை பூரணை தினத்தில் தாயை இழந்தவர்களும், தவறாமல் விரதம் அனுஷ்டித்து பிண்டதானம், தருப்பணம், சிராத்தம் செய்து இயன்ற தான தர்மங்கள் புரிந்து, ஆலய வழிபாடு செய்து, இறந்த தந்தை, தாய் ஆகியோரின் ஆத்மாக்கள் நரக வேதனையில் இருந்து விடுபடவும், நற்கதி பெறவும், சாந்தியடையவும் உதவு வேண்டியது ஒவ்வொருவரினதும் மாபெருங்கடமை என்பதை இந்துக்கள் நினைவிற் கொண்டு செயற்படுதல் வேண்டும். தவறினால் தவிக்க நேரிடும் என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அவ்வாறு பிதிர்க்கடன்களைச் செய்து வந்தால் பிதுர்களின் ஆசிகள் நமக்குக் கிட்டும். அதேவேளை பிதிர் சாபங்களிலிருந்தும் தப்பித்து கொள்ளலாம். பிதுர்கள் நமது காவல் தெய்வங்கள் ஆகும். பிதுர்களின் ஆசிகள் நமக்குப் கிடைக்கப்பெறின் எமது வாழ்வு ஒளி பெறும், சஞ்சலங்கள் நீங்கும், விபத்துக்கள், அவமிருத்துகள், கொடிய நோய்கள், கடன் தொல்லைகள் என்பவற்றிலிருந்து நாம் காப்பாற்றப்படுவோம். இது அநுபவ உண்மை.

ஆடி அமாவசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழவினைகள் பாறும், பாவங்கள் தொலையும், தீர்த்தங்கள் இறைவனின் திருவருள் செறிந்த புனித நீர்.

ஆடி அமாவசையில் தீர்த்தமாடுதல் பிதுர்வழிபாடு செய்தல். சிராத்தம், தருப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பன ஆண்டு தோறும் கீரிமலை நகுலேச்சரத்திலும் மட்டக்களப்பு அமிர்தழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வேறுபல சிவத்தலங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்குரிய விதி முறைகளை நம்முன்னோர்கள் வகுத்து நமக்கு வழங்கியுள்ளனர். அவற்றை உரிய அறிஞர்கள், குருமார்கள் ஆகியோரிடமிருந்து அறிந்து நம் கடன்களை நிறைவேற்றினால் நற்பயன்கள் கிடைக்கப்பெறுவோம். நம் தாய் தந்தையின் உயிர்களும் ஆன்மா ஈடேற்றம் பெறுகின்றன. இது மகன், தாய் தந்தையருக்காற்றும் மகத்தான பேருதவியாகும். அப்பொழுதுதான் “இவன் தந்தை என் நோற்றான் கொல் எனுஞ் சொல்” என்ற வள்ளுவர் வாக்கு மெய்ம்மை பெறுகின்றது.

**‘மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்**
**பந்தியன்பொடு போற்றி வளர்ப்பதும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட**
**வந்தமில் கடனாற்றுதற் கேயன்றோ'**

என்னும் பாடலுக்கமைய மைந்தனைப் பெற்று அன்போடு வளர்த்து. சிறந்த கல்வியளித்து அறிஞர் அவையில் முந்தியிருக்கச் செய்வதற்குத் தந்தையும், தாயும் எடுக்கும் இடையறா முயற்சிக்கு என்ன காரணம்? காரணம் இல்லாமல் காரியம் இல்லை. ஆம்! தந்தை தாயார் இறந்த பின்னர் முறைப்படி செய்ய வேண்டிய அபரக்கிரியைகளை நிறைவேற்றுவதற்கும் பிதுர் கடன்களைச் செய்வதற்கும் பின்னர் ஆண்டு தோறும் அவர்களின் பொருட்டு சிராத்தம் செய்வதற்கும் அமாவாசை, பூரணை விரதங்களை அனுட்டிப்பதற்கும் அவற்றின் மூலம் இறந்த உயிர்கள் சாந்தி பெறுவதற்கும் முத்தியின்பம் அடையப் பெறுவதற்கும். புத்திரர்களின் அறிவுபூர்வமான சிரத்தைபூர்வமான உதவி தேவை என்பதற்காகவேயாகும். எனவே பெற்றோரின் நோக்கத்தை உணர்ந்து ஆடி அமாவாசையின் மகத்துவத்தை அறிந்து அத்தினத்தில் முறைப்படி தென்புலத்தார் வழிபாடு செய்து சைவ ஆசாரங்கள் பேணி நம் முன்னோர்களின் நல்லாசிகளைப் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக!

## திருமுறைகள்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் முதற்றிருமுறையின் முதற்பதிகத்து முதற்பாசுரத்தின் முதன்மொழியாகிய "தோடு" என்னுஞ்சொல் "ஓம்" என்னும் பிரணவத்தின் முதல் எழுத்தாகிய "ஓ"காரத்தை முதலிற் கொண்டு விளங்கலானும், ஈற்றுத்திருமுறையின் ஈற்றுச்செய்யுளின் ஈற்றடியின் ஈற்றுச்சொல்லாகிய "உலகெலாம்" என்பதில் பிரணவத்தின் ஈற்றெழுத்தாகிய மகாரத்தை ஈற்றிற்கொண்டு நிலவுதலானும் பன்னிரு திருமுறைகளும் வேதம் போல "ஓம்" என்னும் பதத்திலேயே நிலையுறுவனவாயின.

ஆதலின் அவற்றின் பொருள் ஓங்கார வாச்சியராகிய சிவபெருமான் என்றே துணியப்பட்டது. தோடு என்னும் பதத்தின் முதலிலுள்ள ஓகாரம் தகர மெய்யோடு புணர்த்திக் கூறப்பட்டமையானும், அம்மந்திரப்பொருளாவர் பர்க்கராகிய சிவபெருமான் எனவும், தகரவித்தையின்கண் வழிபடுந் தெய்வம் அவரே எனவும் சூசிப்பிக்கப்பட்டது.

**ஓங்கார விளக்கம் (ப்ரணவ வித்யா பரிமளம்) என்னும் நூலில் சைவசித்தாந்த சரபம் சோளங்கிபுரம் ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியார் அவர்கள்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவினை அகற்றும் திருநீறு

சைவப்புலவர் செ. நவநீதகுமார்

விபூதி அணியும் முறை விபூதித் தாரணம் எனப்படும். இது உத்தூளனம் திரிபுண்டரம் என இரு வகைப்படும். உத்தூளனமாவது பரவிப் பூசுதல். வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நோக்கியவாறு நின்று வலது கைச் சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் திருநீற்றை எடுத்து அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி நெற்றியிலே பரவிப்பூசுதல் உத்தூளனம் எனப்படும். இவ்வாறணியும் போது சிறிதளவேனும் நிலத்தில் சிந்தக்கூடாது. அவ்வாறு சிந்தினால் திருநீற்றை எடுத்துவிட்டு அவ்விடத்தைச் சுத்தம் செய்ய வேண்டும்.

திரிபுண்டரமாவது திருநீற்றை நீரில் குழைத்து மூன்று குறிகளாகத் தரித்தலாகும். திரிபுண்டரமாகத் தரிப்பதற்கு சிவதீட்சை பெற்றவர்களே தகுதியுடையவராவர். ஏனையோர் உத்தூளன மாகத்தரிக்கலாம். திரிபுண்டரமாகத் தரிக்கும் இடங்கள் தலை, நெற்றி, மார்பு, தொப்புள், முழங்கால்களிரண்டு, புயங்களிரண்டு, முழங்கைகளிரண்டு, மணிக் கட்டிரண்டு, விலாப்புறம், முதுகு, கழுத்து என்னும் பகுதிகளாகும்.

தலையில் ஈசானமந்திரம் உச்சரித்தும், நெற்றியில் தற்புருஷ மந்திரமுச்சரித்தும், மார்பில் அகோர மந்திரங் கூறியும், தொப்புளில் வாமதேவ மந்திரஞ் சொல்லியும், ஏனைய இடங்களில் சத்தியோசாத மந்திரமுச்சரித்துந் தரிக்க வேண்டும். நெற்றியிலும், மார்பிலும், புயங்களிலும் ஆறங்குல அளவினதாகவும், ஏனைய இடங்களில் ஒவ்வோரங்குல அளவினதாகவும் தரிக்கவும். இவ்வாறு விதித்த அளவில் நீளங்குறையில் ஆயுள் குறையும், நீளங்கூடின் தவம் குறையும்.

குறிகள் ஒன்றையொன்று தீண்டாதவாறும், இடையறாதவாறும், சமஅளவு இடைத் தூரம் உடையதாகவும், வளையாதவாறும் அமைய வேண்டும். சந்தியா காலங்களில் அதாவது காலை, உச்சி, மாலை ஆகிய வேளைகளில் நீர் விட்டுக் குழைத்து திரிபுண்டரமாகவும் ஏனைய வேளைகளில் உத்தூளனமாகவும் தரித்தல் வேண்டும். நித்திரைக்கு முன்பும், பின்பும், போசனத்திற்கு முன்பும், பின்பும், நீராடியபின்னரும், சந்தியா காலங்களிலும், சிவபூசைக்கு முன்னரும், பின்னரும் அவசியமாக விபூதியணிய வேண்டும்.

நெற்றியிலே விபூதியணிவதால் வாய், கண் முதலிய உறுப்பினால் செய்த பாவங்கள் விலகும். மார்பில் திருநீறு தரிப்பதால் மனத்தால் செய்த பாவங்கள் நீங்கும். கால்களால் செய்யும் பாவங்கள் கால்களில் திருநீறு அணிவதால் நீங்கும். கைகளால் செய்யும் பாவங்கள் கைகளில் திருநீறு அணிவதால் நிவர்த்தியாகும்.

குரு, சிவனடியார், பெரியோர் திருநீறு தந்தால் அவர்களை வணங்கி இரு கைகளாலும் வாங்கி அணிய வேண்டும். குரு முன்னும், சிவாக்கினி முன்னும், இறைவன் முன்னும், திருநீறு தரித்தலாகாது. அவ்விடங்களில் திருநீறு தரிக்கும்போது திரும்பி நின்று தரித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுத்த நிலத்திலும், பாவிகள், சண்டாளர்கள் முன்னும் திருநீறு தரித்தலாகாது. கிடந்து கொண்டும், நடந்து கொண்டும் திருநீறு தரித்தல் குற்றம். சிவதீட்சையில்லாதவர்கள் தந்த திருநீறும், விலைக்கு வாங்கிய திருநீறும், ஒரு கையால் வாங்கிய திருநீறும் அணியலாகாது.. வாயங்காந்து கொண்டும், தலை நடுங்கிக் கொண்டும், தலை கவிழ்ந்து கொண்டும், ஒரு விரலாலும் திருநீறு தரித்தலாகாது. திருநீற்றின் மேல் சந்தனமேனுங் குங்குமமேனுந் அணிதலாகாது. சந்தனங் குங்குமம் என்பவற்றை நெற்றியிலே புருவமத்தியில் அணிய வேண்டும்.

திருநீறு அணிந்தவரைச் சிவனெனக் கருதி வணங்குவது உத்தமம். சுந்தர மூர்த்தி நாயனார், திருத்தொண்டத்தொகையிலே அறுபத்து மூன்று தனியடியாரையும், ஒன்பது தொகையடியாரையுங் கூறி இவ்வடியார்களுக்கு தான் அடியேன் என்று பாடியுள்ளார். இங்கு கூறப்பட்ட தொகையடியார்களுள் முழுநீறு அணிந்த முனிவரும் அடங்குவர். முழுநீறு பூசிய முனிவர் என்பவர் திருநீற்றினை உடலெங்கும் உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் அணிந்திருப்பவர்களாவர். "முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்" என்று குறிப்பிட்டுள்ளார் சுந்தரமூர்த்தி நாயனார்.

பெரிய புராணத்தில் திருநீற்றின் பெருமையைப் பேணிய அடியவரைக் காண்கின்றோம். சேரமான் பெருமாள் நாயனார் பட்டத்து யானையில் நகர் வலம் வந்துகொண்டிருந்தார். அவ்வழியே ஒரு சலவைத் தொழிலாளி தன் தொழிலுக்கு வேண்டிய உவர்மண் சுமந்து கொண்டு வந்தான் . உவர் மண் அவன் மேனியிற் படிந்து திருநீறு பூசியவன்போற் காட்சி தந்தது. சேரமான் பெருமாள் நாயனார் அவனைக் கண்டவுடனே யானையை விட்டு இறங்கி வந்து "அடியேன் அடிச்சேரன்" என்று வணங்கினார். அவன் தன் நிலையைக் கூறினான். நாயனாரும்" நீர் திருநீற்றை எமக்கு நினைப்பித்தீர் அதனால் நான் உம்மை வணங்கினேன்" என்று கூறினார்.

திருமுனைப்பாடி நாட்டை ஆண்டு வந்தார் நரசிங்கமுனையார். இவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் வளர்ப்புத் தந்தை. அவர் திருநீறு பூசியவர்களைச் சிவனென உபசரித்து வணங்குபவர். திருவாதிரை நாளில் இறைவழிபாடியற்றி, அன்று வரும் நீறு தாங்கிய அடியவர்களை உபசரித்து அவர்களிற்கு நூறு பொன் கொடுத்து அனுப்புவார். ஒருசமயம் திருவாதிரையன்று வந்திருந்த அடியவர்களோடு நோயுற்ற ஒருவரும் வந்திருந்தார். ஒழுக்கக்கேட்டினாலேயே அவருக்கு நோய் ஏற்பட்டது. அவரைக் கண்டதும் அங்கு நின்ற பணியாளர் விலகி நின்றனர். அவர் திருநீறு அணிந்து அடியவர்போல் வந்திருந்தமையால் அவரைக் கண்ட நரசிங்க முனையர் அவரை இன்முகத்துடன் வரவேற்று மற்ற அடியவர்களிற்கு கொடுப்பதை விட அதிகமான பொன் கொடுத்து அனுப்பினார்.

**சீல மிலரே யெனினுந் திருநீறு சேர்ந்தாரை**
**ஞாலமிகழ் தரு நரகம் நண்ணாமை எண்ணுவார்**
**பாலணைந்தார் தமக்களித்த படி யிரட்டிப் பொன் கொடுத்து**
**மேலவரத் தொழுதினிய மொழி விளம்பி விடை கொடுத்தார்.**

சகல ஐஸ்வரியங்களையும் தரும் திருநீற்றினையும் அந்நீறு அணிந்தவரையும் போற்றி உய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசக்தி

அமரர் சிவஸ்ரீ.சி. குஞ்சிதபாத குருக்கள்,
முன்னாள் பிரதம குரு,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்.

சைவ சமயத்தவர்களால் முழுமுதற்கடவுள் என்று வழிபடும் சிவபிரான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் நிமித்தம் கொண்டருளிய சுத்த தத்துவங்கள் மூன்று அவை சிவம், சாதாக்கியம், மகேஸ்வரம் என்பனவாம். இவற்றுள் சிவம் அருவமாய் அறிந்தவர்களால் வழிபடக்கூடியவராய் சதாசிவத்திற்கும் மேலானதாய்ப் பராசக்திக்குக் காரணமாய் இருப்பதாம்.

பராசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக ஆதிசக்தியும், ஆதிசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக இச்சாசக்தியும், இச்சாசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக ஞானாசக்தியும், ஞானாசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக கிரியாசக்தியும் தோன்றின. எனவே இவைகள் நிஷ்கள சக்திகளாகும். இச் சக்திகளிலிருந்து யோகிகளாலும் ஞானிகளாலும் கிரியாவான்கள் செய்யும் பூசை நிமித்தம் சாதாக்கியங்கள் தோன்றின.

நாதமென்னும் லிங்கமும் பிந்துவென்ற பீடமும் சேர்ந்தது கன்மசாதாக்கியமென்னும் ஆவுடையாளுடன் கூடிய இலிங்கம் ஆகும். இது சிவசக்தி சுருபமாகும். இவை பஞ்சகிருத்தியத்திற்குத் துணையாக உள்ளன. சக்தியாகிய இறைவி மேற்கூறிய பராசக்தி, சிற்சக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என ஐந்து சக்தியாகி ஐந்தொழில் நடாத்துவதுடன் ஐந்தொழில் கட்கேற்பப் போக, வீர, கோர அதிகார சக்தி வடிவங்களாயும் நிற்பனவாம்.

போகசக்தி பார்வதியும், வீரசக்தி துர்க்கையும், கோரசக்தி காளியும், அதிகாரசக்தி நாராயணனை அதிட்டித்து நிற்கும் நாராயணியுமாகும். போகசக்தி சகல உலகங்களையும் ஈன்றளித்துக் காப்பாற்றி அனுக்கிரகிப்பவள். வீரசக்தி மகிஷாசுர சங்காரத்தில் ஈடுபட்ட கோலமாய்ச் சகல வெற்றிக்கும் இருப்பிடமாயிருப்பவள்.

கோரசக்தி பயங்கர உருவுடையதாய் வினைகளை அழித்து ஆன்மாக்களை ஈடேற்றும் சங்கரியாவாள். அதிகாரசக்தி துஷ்டரை அடக்கிச் சிஷ்டரைப் பாதுகாத்து நிற்கும் திதி என்னும் பஞ்சகிருத்தியம் செய்பவளாம்.

கர்ம சாதாக்கியமாம் சிவலிங்கவடிவில் தியானித்துப் பூசிக்கப்படும் சாதாசிவ மனோன்மணி சக்தி பக்குவான்மாக்களுக்கு மலத்தை நீக்கிச் சத்திநிபாதத்தை அருளி ஆன்மாவைச் சிவத்தோடு சேர்ப்பவளாம். சிவம் சக்தியோடுகூடி உலக சிருஷ்டி நிகழும்படி சங்கற்பித்தலே உலகத்தோற்றமாம். சூரியனில் ஒளிபோலச் சிவபிரான் கருணை வடிவான சக்தியுடன் பிரிவின்றியிருத்தலாகிய வல்லமையே சிவசக்தியாகும்.

இத்தன்மையதாகிய உமை அங்கயற்கண்ணி, மீனாட்சி, காமாட்சி, ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, மஹேஸ்வரி, நாகேஸ்வரி, காளி, மாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய பெயர்களுடனும் உலகில் பிரசித்தமான கோயில்களில் மூர்த்தியாக இடம்கொண்டிருக்கின்றாள். இத்தகைய அம்மை வடிவங்களை வழிபடும் அடியார்கட்கு அருள்கொடுப்பவரும் உமாமஹேஸ்வரராகும் சிவபிரானேயாவர். அம்மையின் திருவுருவங்களில் சிவபிரான் அதிட்டித்து நின்றருள் செய்வார். **'உடையாள் நடுவுள் நீயிருத்தி'** என்ற திருவாசகம் இதனை வலியுறுத்துகின்றது.

இவ்விதமான அம்பாளை, பிம்பம், யந்திரம், மந்திரமாகிய வழிகளால் வழிபடலாம். எல்லோராலும் முடியாதது யந்திர வழிபாடாகும். "ஸ்ரீ சக்கர" வழிபாடு பலராலும் விரும்பி வழிபடப்பட்டு வருகின்றது. ஸ்ரீ சக்கரம் ரேகை கோணமுறைகளாகவே அமைப்பு உள்ளது. பஞ்ச தசாக்ஷரிமஹா வித்தையில் 03 ஹகாரங்களும், 2 ஹகாரங்களும், சிவாக்ஷரங்களாம். மீதியான (3 லகாரம், 2 லகாரம், ஈ காரம், ஏ காரம்) சக்தி அக்ஷரங்களாம். (ஹ்ரீம்) காரம் மூன்றும் சிவசக்தி வடிவான உபயாக்ஷரங்களாம்.

சக்கரங்களில், 4 சிவசக்கரங்கள், 5 சக்தி சக்கரங்களாக ஏற்பட்ட ஸ்ரீ சக்கரம் சிவசக்தியின் சரீரமாகும். பராசக்தி திரிகோண வடிவினள், பரம சிவன் பிந்து வடிவினர். ஆதலின் பிந்துத் திரிகோணங்கட்கு ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாத சம்பந்தமுண்டு. யார் பிருதுவி முதல் சதாசிவம் ஈறான தத்துவங்களைப் பின்னமாக வழிபடுகிறார்களோ அவர்கள் பாபம் செய்தவர்களாகுகின்றார்கள் என ஆருண சுருதி கூறுகின்றது.

இன்னும், லலிதா திரிசதி நாமத்தில், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ஈசதாண்டவ சாஷிண்யே நம, பரமேஸ்வரனது தாண்டவத்திற்கு சாஷியானவள் என்பதாம். சாஷி என்பது உலகில் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் ஆகிய பஞ்சகிருத்தியங்களும, 64 கலை ஞானமுமாம். இவற்றுக்குச் சக்தியே சாஷியாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

"ஈச சக்திநம", "காமேஸ்வரப் பிராண நாடிநம" ஈசனுக்குச் சக்தியானவள் என்றும் காமேஸ்வரராகிய சிவபிரானுக்கு தானே "லீலை" யாகிய ஒரு சரீரத்தைச் சுவிகரித்து அதற்குப் பிராண நாடியாகவும் இருக்கின்றாள் என்றும், "காமேஸ்வரோற் சங்கவா சிநேநம்" காமேஸ்வரருடைய இடது தொடையில் வசிப்பவள் என்றும், "ஈஸ்வரார்த்தாங்கசரீராயை நம ஈசனுடைய பாதிச்சரீரத்தைக் கொண்டவள் என்றும்,

ஈசாநாதி பிரம்மயிநம, பஞ்சபிரம் மஸ்வரூபிணி "பஞ்சப்பிரமங்களும் நான் அகங்காரம் நீங்கிச் சச்சிதானந்த பரப்பிரம்மஸ்வ ரூபமாயுள்ளன என்றும் பஞ்சப்பிரேதாசநாச் நாணய நம" நான் என்ற அகங்காரம் நீங்கிய வழித்தன் செயலற்று நிற்கும் நிலை. பிரேதம் என்பது இயங்கும் நிலையற்றது. எனவே மேற்கூறியன பஞ்சப் பிரமங்களும் சிவ சக்தியின் ஏகரூபம் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இவற்றால் கர்ம சாதாக்கிய வடிவமும் பஞ்சதசாஷிரீ மந்திரமும் ஸ்ரீ சக்கர வடிவமும் சிவசக்தி சுரூப வழிபாடேயாகும். உலகில் ஜீவன்களினால் கொடும் செயல் எவ்வெப்போது உண்டாகின்றதோ அக் காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை நிவர்த்திக்கத் துர்க்கை, காளி முதலிய சக்திகள் வெளிப்படுவது இயற்கை, அச்சக்திகளின் வெளிப்பாட்டால் தர்மம் நிலைக்கின்றது. இதனால் தேவி தர்மதேவியுமாகின்றாள், ஆலயங்களில் துர்க்கை காளி முதலியவற்றை வணங்குதலால் புறப்பகையாகிய நாஸ்திகத் தன்மையும் அகப்பகையாகிய காமாதி பகையும் நிவர்த்தியாகின்றன.

குடந்தை வழிவந்து யாழ் உடுவையம் பதி சுயம்பு மூர்த்தியாம் மீனாஷி சுந்தரேஸ்வர, மயூரபந்தியாதீன சிவத்துவிஜராம் குமாரசாமி, சின்னத்துரை, சோமஸ்கந்த சிவாசாரிய அந்தணோத்தமரால் தேவியின் அருளுடன் எழுந்த இந்தக் காளியின் ஆலயத்தில் சக்தி மட்டுமல்ல சிவசக்தி வழிபாடாக அமைந்து அடியார்களுக்கு அருள் புரியவேண்டும் என்னும் நன்முயற்சியால் சிவசக்தியேகரூபமாகக் காட்சி கொடுக்கும் ஸ்ரீ சக்கரமும் பூசை செய்யப்பட்டு வருகின்றது என்பது சிறப்புடைய அம்சமாகும். மேற்கூறிய வழித்தோன்றலில் ஒருவராகிய எனது பிதாவும் இத்தேவிக்கு நைமித்திக கருமங்கள் செய்துள்ளார்கள். எனவே இத்தேவி எமது கவுண்டின்யகோத்திர குல தேவியுமாவாள்.

ஆலயம், விக்கிரகம், யந்திரம், பூசை, நித்தியம், நைமித்திக விசேஷங்கள் எல்லாம் பக்தர்களினதும், தேசம், அரசு முதலியவர்களின் நன்மைக்கேயாகும். கும்பாபிஷேகம், யாகம், ஓமம் முதலிய கிரியைகளால், தேவியின் அருள் என்றும் ஓங்கும். எமக்கும். தேவியருள் உண்டாகும். தேவியானவள் பக்தர்களைக் காக்கவே கருணா மூர்த்தியாகித் திரிகோணாசலத்தில் கோணேசப்பெருமானருளுடன் என்றும் அருள்பாலிக்கின்றாள். இதற்கு இக்காலம் "அருள்மிகு" என்ற அடைமொழி முதலில் புகுந்துவிட்டதே!

### திருமுறைப் பெருமை

திருமுறைகள் ஸ்ரீ ஆளுடைய பிள்ளையார் முதல் ஸ்ரீ அருண்மொழித் தேவர் இறுதியாயுள்ள நாயன்மாராற் கூறி அருளப்பட்டனவேனும், ஸ்ரீ சதாசிவமூர்த்தி பால் நின்று இருக்கு முதலிய வேதங்கள் நான்கையும் காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் தோற்றுவித்தாற் போல, சிவபிரானே அவ்வாளுடைய பிள்ளையார் முதலாயினார்பால் அதிட்டித்து நின்று அத்திருமுறைகளைத் தோற்றுவித்தலான் அவை சிவபிரானால் இயற்றி அருளப்பட்டனவேயாம் என்க. பேயினால் பீடிக்கப்பட்டான் வாய்ச் சொற்கள் எல்லாம் பேயின் சொற்களே யாமன்றி அவன் சொற்கள் ஆகாதவாறு போலச் சிவபிரானால் அதிட்டிக்கப்பட்ட நாயன்மார் வாய்ச்சொற்களாகிய திருமுறைகள் எல்லாம் அச்சிவபிரான் சொற்களே. இதனை, **"எனதுரை தனதுரை யாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்"** என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்தவாற்றானும் உணர்க.

சிவபிரானுக்கு மந்திரம் தூலசரீரமும் ஆன்மா சூக்கும சரீரமும் சத்தி அதிசூக்கும சரீரமுமாம் எனச் சிவாகமங்கள் ஓதுதலால், அம்மந்திர சொரூபமாகிய வேதங்களின் கண்ணும், அவற்றின் வேறாகாத திருமுறைகளின் கண்ணும் சிவபிரான் விசேட சாந்நித்யம் உற்றிருப்பார் என்க.

**யாழ்ப்பாணத்து வண்ணைநகர் ஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் இயற்றிய திருமுறைப் பெருமை- 1911 என்னும் நூலில் இருந்து...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிச்சுவாதி

செல்வி. யோ. வினுயா,
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

இந்துசமயத்தவர்களால் ஆடிச்சுவாதி பல காரணங்களால் ஒரு புனித தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த வகையில் சமய குரவர்களுள் ஒருவரும் திருமுறை ஆசிரியர்களுள் மூன்றாமவருமான தம்பிரான் தோழர் என அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசைத்தினம் ஆடிச்சுவாதி ஆகும்.

இவர் திருக்கைலாசத்திலே ஆலாலசுந்தரர் என்னும் நாமத்துடன் சிவபெருமானுக்கு அணுக்கத்தொண்டராக இருந்தவர். ஒருமுறை உமையம்மையின் சேடிப்பெண்களான அனந்திதை, கமலினி ஆகியோர்மேல் காதல் கொண்டார். இதனால் இறைசித்தப்படி திருமுனைப்பாடி நாட்டில், ஆதி சைவர் குலத்தில் சடையனார் மற்றும் இசைஞானியார் அம்மையாருக்கும் திருமகனாக அவதரித்தார். இவருடைய பிள்ளைத் திருநாமம் ஆரூரர் என்பது திருமண நாளில் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். இறைவனின் விருப்பத்திற்கிணங்க திருவெண்ணெய் நல்லூரில் "பித்தா பிறை சூடி" என்று சிவபெருமான் அடி எடுத்துக் கொடுக்கக்க இவர் பதிகப்பாமாலைகளைப் பாடத் தொடங்கினார். இவர் அருளிய திருமுறைகள் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன

திருவதிகையில் சிவபெருமானிடம் திருவடி தீட்சை பெற்றார். திருவாரூரில் இறைவன் தம்மை இருவருக்குத் தோழனாகத் தந்தான். திருவாரூரில் பரவையாரையும் திருவொற்றியூரில் சங்கிலியாரையும் மணந்தார். திருத்தொண்டர் தொகை இவரால் அருளப்பட்டது. திருவஞ்சைக்களத்தில் முத்திப்பேறு வேண்டி "தலைக்குத் தலைமாலை" எனும் பதிகம் பாடினார்.



சிவபிரான் ஆக்ஞைப்படி தேவர் கூட்டத்தால் அழைத்துவரப்பட்ட வெள்ளையானை மீதேறி "தானெனை முன் படைத்தான்" எனும் திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கைலாச மலையின் தெற்கு வாயிலூடாக உள்நுழைந்து கைலாசநாதனின் திருவடியடைந்தார். இவ்வாறு இவர் முத்தி பெற்ற தினம் ஆடிச்சுவாதி ஆகும்

ஆகவே ஆடிச்சுவாதி இந்துமக்களுக்கு பல பலன்களையும், நன்மைகளையும் தருகின்ற ஒரு தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இத்தினமானது சுந்தரரின் குருபூசையாகவும், கருடபகவானின் அவதார நாளாகவும் அனுஷ்டிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிச்செவ்வாய்

செல்வி. வி. விதுஜா,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

"ஆடி மாத காற்றில் அம்மிக்கல்லே பறக்கும்" என்று ஒரு பழமொழி உண்டு. வெயில், காற்று, மழை என மூன்று இயற்கை சக்திகளும் தங்களின் ஆற்றலை காட்டும் ஒரு பருவ காலமாக ஆடி மாதம் கருதப்படுகிறது. இம்மாதம் ஆன்மிக மாதம் என்று சொல்லப்படுகின்றது. பெண்மை என்னும் சக்திக்கு பெருமை சேர்க்கும் மாதமே ஆடி மாதமாகும். பார்வதி தாயின் தவத்தை மெச்சிய பரமசிவன் ஆடிமாதம் அம்மனின் மாதமாக இருக்கவேண்டும் என வரங்கொடுத்தார். இதனாலேயே இம்மாதத்தில் சிவன் சக்திக்குள் அடக்கமாகிறார் என நம்பப்படுகிறது. தேவர்களது இரவு காலமான தஷ்ணாயண காலத்தின் ஆரம்பமும் ஆடிமாதத்திலேயாகும். கற்கடக மாதம் என அழைக்கப்படும் ஆடிமாதமானது இறைவனை போற்றி விரதமிருந்து இறையருள் பெறுவதற்குரிய சிறந்த மாதமாகும் இதனாலேயே எம் முன்னோர்கள் வீடுகளில் சுப நிகழ்வுகளை தவிர்த்துள்ளர்.

ஆடிமாதத்தில் பெண்கள் வீட்டு பூஜை அறையில் தீபம் ஏற்றி வைத்து இறை வழிபாடு செய்யும்போது திருவிளக்கு மந்திரத்தை உச்சரிப்பது, குடும்பத்தில் சுபிட்சத்தை தரும்.

ஆடிச்செவ்வாய் தேடிக்குளி அரைத்த மஞ்சளை பூசிக்குளி என்கிறது பழமொழி. ஆடிசெவ்வாயன்று எண்ணை தேய்த்து மஞ்சள் பூசி நீராடுதலின் மகத்துவத்தை இப்பழமொழி எடுத்துக்காட்டுகிறது. இந் நாளில் சுமங்கலிகள் மஞ்சள் பூசி குளிப்பதால் மாங்கல்ய பலம் கூடும், தாலி பாக்கியம் நிலைக்கும் என்பது ஐதீகம். இந் நாள் அம்பாளிற்கு மிகவும் விசேஷமான நாள் இந்த நாளில் அம்பாளை வழிபட்டு விரதமிருந்தால் வேண்டிய பலன் கிடைக்கும் என்பார்கள். மற்றும் முருகப்பெருமான், பெண்தெய்வங்களிற்கும் இந் நாளில் சிறப்பு வழிபாடு மேற்கொள்வார். ஆடிசெவ்வாய் தினத்தன்று நாம் என்ன புண்ணியம் கருமம் செய்தாலும் அதன் பலன் நம்மை நிச்சயம் வந்து சேரும். இந் நாளில் அன்னதானம் செய்வோமேயானால் ஏனைய நாட்களில் செய்வதைவிட 48 மடங்கு பலன் அதிகமாக கிடைக்கும் என்பார்கள்.

கணவனது நீண்ட ஆயுளை வேண்டி பிரார்த்தனை செய்தும், சிறந்த மாங்கல்ய பாக்கியம் அமையவேண்டும் என வேண்டியும், பிள்ளை செல்வத்தை வேண்டியும், கல்வியை வேண்டியும் இவ் ஆடிசெவ்வாய் தினங்களில் அம்பாளின் அருள்வேண்டி விரதமிருப்பர். ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் இருப்பவர்களும், அங்காரக தோஷம் இருப்பவர்களும், செவ்வாய் நீசமடைந்தவர்கள் மற்றும் செவ்வாய் திசை நடப்பவர்கள் இந்நாளில் விரதமிருத்தல் சிறந்தது. அம்மன் ஆலயங்களில் இத்தினங்களில் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெறும். இந்நாளிலேயே ஔவையார் விரதமும் அனுட்டிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய்க்கிழமைகளில் ராகு காலத்தில் துர்க்கை அம்மனை பூஜிப்பது விசேஷமானது. இக்காலத்தில் அம்பாள் இராகுவாக அவதாரம் செய்ததாக கூறுவர். தோஷ நிவர்த்தி வேண்டுபவர்களும், திருமணம், பிள்ளை பாக்கியம் வேண்டுபவர்களும் ராகு கால பூஜைகளில் பங்கு கொள்வது நல்லது. ஆடிச்செவ்வாய் தினங்களில் அம்மனை நினைத்து விரதம் இருப்பவர்கள் அம்மன் ஆலயங்களுக்கு சென்று பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வது, பூஜை அறையில் விளக்கு ஏற்றிய பின் அம்மனுக்கு உரிய மந்திரங்களை கூறி அம்மனுக்குரிய பாடல்கள் பாடல், நெய் விளக்கு ஏற்றி வழிபாடு மேற்கொள்ளல் போன்ற முறைகளை பின்பற்றுதல் சிறந்ததாகும். அதேபோல் முருகப் பெருமானை வேண்டி விரதம் இருப்பவர்கள் முருகப்பெருமானுக்குரிய மந்திரங்கள் பாடல்கள் என்பவற்றை பாடி வணங்கி பின் அருகில் உள்ள ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டை மேற்கொள்வதும் சிறந்ததாகும்.

செவ்வாய் கிரகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஆடிச்செவ்வாய் நாட்களில் அதிகாலையில் எழுந்து குளித்து சிவப்பு நிற ஆடை அணிந்து அம்மன் கோவிலுக்குச் சென்று செந்நிற மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும். நெய்வேத்தியமாக சிவப்பு நிற பழங்களைப் படைப்பதும் சிறந்தது. இத்தினங்களில் காலையில் அம்மனையும் மாலையில் முருகனையும் வழிபடுதல் சிறந்தது. இந்நாளில் சிலர் தமது வீடுகளில் உணவு சமைத்து கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கு வழங்குவார் அத்துடன் புதிய உடைகள் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் வைத்து தானமாக வழங்குவார். செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் துவரை தானம் செய்யலாம் சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள் குங்குமம் போன்றவற்றை தாம்பூலத்தில் வைத்து கொடுப்பது சிறந்ததாகும்.



இவ் ஆடிசெவ்வாய் நன்னாளில் விரதமிருப்பதால் பல்வேறு அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முடியும் இந்நாளில் விரதம் இருப்பதால் ஆரோக்கியம் மேம்படும், கடன்கள் தீரும், கணவனது ஆயுள் கூடும், திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு திருமணம் கைகூடும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை செல்வம் கிட்டும், தோஷங்கள் நிவர்த்தியாகும், கல்வியறிவு பெருகும், வறுமை நீங்கி செல்வம் செழிக்கும், எல்லா வளங்களும் பெருகும். இக்காலகட்டத்தில் முழு தினமும் உபவாசம் இருத்தல் சிறப்பானது இவ்வாறு விரதம் இருப்பது மனதுக்கும் உடலுக்கும் நன்மை தரும் எனினும் நாள் முழுவதும் உபவாசம் இருக்க இயலாதவர்கள் பழங்கள் பால் போன்றவற்றை உணவாக எடுத்துக் கொள்ளலாம். இந்நன்னாளில் மாங்கல்யம் காக்கும் பூஜை மேற்கொண்டால் மங்காத செல்வத்தை அம்பாள் தருவார். ஆகவே ஆடிச்செவ்வாய் நன்னாளில் விரதம் இருந்து இறைவனை பிரார்த்தித்து இறை அருள் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பணியில் சமயகுரவர்கள்

த. கஜேந்திரன்.

உலகெல்லாம் அடியார் கூட்டம் உவந்து ஏத்த, அருட்சுடராய் விளங்கும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள சைவ சமயத்தின் எழுச்சிக்கும் புகழுக்கும் பெருமை சேர்த்தவர்களுள் பெரும் புகழுக்குரியவர்கள் தான் சமயகுரவர்கள் ஆவார்கள்.

இவர்கள் பாவினால் இறைவனுக்கு மாலை சூட்டியது மட்டுமல்லாமல் சமூகப்பணியிலும் ஈடுபட்டிருந்தார்கள். அத்தகைய சமயகுரவர் நால்வரும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகப் பெருமான் ஆகியோர் ஆவார்.

அவர்களுடைய சமூகப் பணியை ஒவ்வொருவராக நோக்குவோம். முதலில் திருஞானசம்பந்தர். இவர் பணியினைப்பற்றி இவரைப்பற்றி அறிந்து கொள்வோம். சோழநாட்டில் சீர்காழிப் பதியிலே சிவபாதவிருதயர், பகவதியார் என்பவர்களுடைய தவத்தின் பலனாகச் சம்பந்தர் அவர்களுக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் மூன்றாம் வயதினிலே ஞானப்பால் உண்டு. பதிகம் பாடினார். இவரே எமது சமயத்தின் முதற் குரவராவார். இவர் பதிகம் பாடியதுடன் ஆண்டுகள் செல்லச் சமூகப் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.இவர் ஒருமுறை திருவீழிமிழலைக்குச் சென்றபோது அங்கு மாரி வளங்குன்றிப் பஞ்சம் ஏற்பட்டது. அடியார்கள் யாவரும் பசிப்பிணியால் வருந்தியபோது சம்பந்தர் சிவபெருமானைப் பாடிப் படிக்காசு பெற்றார். இக்காசைக் கொண்டு அடியார்களுக்கு அமுது செய்வித்தார். அத்துடன் பயன் இல்லாமல் இருந்த பாலை நிலத்தினை விவசாயத்திற்குகந்த நிலமாக மாற்றினார். இவர் கிரியை நெறியில் சிறந்து விளங்கி அந்நெறியினால் பல பணிகளை மேற்கொண்டார். இக் கிரியை நெறியானது அகத்தொழிலாலேயே சிவனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கி செய்யும் வழிபாடே ஆகும். இதில் பூசை செய்தல், திருமுறைகள், உண்மைபேசல், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையாக வைத்திருத்தல், அன்னதானஞ் செய்தல் போன்றவற்றில் திருஞானசம்பந்தர் அதிக ஈடுபாடு காட்டினார். சமயத்தைவளர்த்தெடுப்பதே பெரும் பணியாகக் கொண்டார். இதற்கென இவர் சமணர்களுடன் போராவேண்டி இருந்தது. சமணர்களுடன் வாதிட்டுத் தேவாரத் திருவேட்டைத்தீயில் இட்டுப் பச்சையாக எடுத்தது மட்டுமன்றி வைகை ஆற்றிலே தேவாரத் திருவேட்டைப் போட்டு எதிர் ஏறச் செய்தது போன்ற அற்புதங்களைச் சமய மேன்மைக்காக மேற்கொண்டார். இறுதியாகச் தனது திருமண நாளன்று சம்பந்தர் துணைவியாருடனும், திருமணங்காண வந்த சுற்றத்தாருடனும் சிவசோதியில் புகுந்து சிவன்தாள் சேர்ந்தார். சம்பந்தருடைய அற்புதத்தையும், பணியையும் சிறந்த நூலாகிய திருக்களிற்றுப் படியாரில் "ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்க" என்ற செய்யுள் முழுமையாகக் குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த குரவர் அப்பர் எனப்படும் திருநாவுக்கரசுநாயனார். இவர் திருமுனைப்பாடியில் நாட்டில், திருவாமூரில் வாழ்ந்து வந்த சைவ வேளாள குலத்தினரான புகழனாருக்கும் மாதினியாருக்கும் பிறந்தவராவார். இவர் இள வயதிலேயே கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார். இதன் பயனாக, உடல் முதலியவற்றின் நிலையாமையினை உணர்ந்து, தம்மிடம் இருந்த செல்வத்தைக்கொண்டு பல அறங்கள் செய்தார். திருவீழிமிழலையில் சம்பந்தருடன் சேர்ந்து இவரும் படிக்காசு பெற்று அடியார்களின் பஞ்சம் நீக்கினார். இவருடைய பணியை உயர்வுபடுத்தித் "தொண்டுக்கு அப்பர்" என்றும் கூறப்படுவார்கள். ஒரு சமயம் நாவுக்கரசர் பூம்புகலூர்க் கோயிலுக்குச் சென்று உழவாரத்தொண்டு செய்துவரும் நாளில், அவருடைய பற்றற்ற நிலையை உலகத்தார்க்குக் காட்ட இறைவன் திருவுளங்கொண்டான். எனவே, அவருடைய உழவாரம் நுழையும் இடமெல்லாம் பொன்னும் மணியும் பொழிய இறைவன் அருள் செய்தான். அப்போது நாவுக்கரசர் பொன்னுக்கும், மணிக்கும் பருக்கைக் கற்களோடு வேறுபாடு காணாது அவற்றைக் கையினாலும் தொடாது உழவாரத்தினால் எடுத்துக் குளத்தில் எறிந்தார். இவற்றில் இருந்து அப்பர் இறைவனைத் தவிர பொன், பொருளிலோ, பற்றற்றவராக இருந்திருக்கின்றார் என்பது புலனாகிறது.

இருவரும் சமயப் பணியைக் காக்கும் பொருட்டுப் பாம்பு தீண்டி இறந்த திருநாவுக்கரசு என்ற பிராமணப் பிள்ளையை உயிர்ப்பித்தார். இவர் சரியை நெறியில், நின்று சமூகப்பணியில் ஒழுகலானார். இந்நெறியில் தனது உடம்பு சார்ந்த புறத் தொழிலால் சிவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். இவற்றில் அப்பர், கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல், மெழுகுதல், பூ எடுத்தல், பூமாலை தொடுத்தல், சிவனைப் புகழ்ந்து பாடுதல், கோயிலில் விளக்கேற்றல், நந்தவனம் உண்டு பண்ணல், சிவனடியாரைக் கண்டால் அவருக்கு வேண்டிய பணிவிடைகளைப் புரிதல் போன்ற பணிகளைச் செய்தார். முன்வினைப் பயனால் சைவ சமயத்தவரான இவர் புறச் சமயத்திலே நெடுங்காலம் இருந்தபின் மீண்டும் சைவ சமயத்திற் புகுந்தார் தாச மார்க்கமே தனக்குத் தக்கதெனக் கடைப்பிடித்தும் புகலூர் என்ற தலத்தில் சித்திரை மாதச் சதய நட்சத்திரத்திலே சிவனடி நிழலில் இரண்டறக் கலந்தார்.

அடுத்த குரவர் சுந்தரமூர்த்தி நாயனார். இவர் திருமுனைப்பாடியில் உள்ள சடையனார் என்பவருக்கும் இசைஞானியார் என்பவருக்கும் பிள்ளையாக அவதரித்தார். இவருக்கு நம்பியாரூரர் என்ற நாமம் இடப்பட்டது. சுந்தரிடம் இருந்து சமயப்பணியைப் பெற்றதினை விடச் சுந்தரர் இறைவனிடம் இருந்து பல உதவிகளைப் பெற்றுக் கொண்டார். இதனாலேயே ஏயர்கோன் கலிக்காமர் என்ற அடியவருடன் சினம் உண்டாகக் காரணமாகியது. இவரும் இறைவனுக்காகப் பதிகம் பாடிப் பணி செய்தார். இவர் செய்த பணிகளே முதன்மையானது. ஒரு முறை சுந்தரர் கொங்கு நாட்டில் உள்ள திருப்புக்கொளியூரை அடைந்தார். அங்கே மறையோர் வாழும் மாடவீதி வழியே நடந்து சென்றார். அப்போது அங்கே ஒரு வீட்டில் மங்கல ஒலியும், எதிர்வீட்டில் அழுகை ஒலியுங் கேட்டது. அதனைக் கேட்டுவியப்புற்ற சுந்தரர் அங்கிருந்தோரிடம் அதற்கான காரணத்தைக் கேட்டார். "ஐந்து ஆண்டுகள் நிரம்பிய இரண்டு வீட்டுப் பிள்ளைகளும் நீராடுவதற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்திற்குச் சென்றபோது, அவர்களில் ஒருவரை முதலை விழுங்கிற்று. மற்றவன் வீடு சேர்ந்துவிட்டான். அவனுக்கு இன்று பூணூற் சடங்கு அதனால் அங்கு மங்கல ஒலி அதைக்கண்டு எதிர்வீட்டில் முதலை விழுங்கிய தன் மகனை நினைத்து அழுகின்றனர்." என்று அங்கிருந்தோர் சுந்தரருக்குக் கூறினர். உடனே சுந்தரர் குளக்கரைக்குச் சென்று பதிகம் பாடினார். உடனே இறைவன் திருவருளால் முதலை அப்பிள்ளையைக் கரையில் கொணர்ந்து உமிழ்ந்தது. இதனைக்கண்டு எல்லோரும் சுந்தரரையும், இறைவனையும் போற்றினர். சுந்தரர் யோக நெறியில் சிவப் பணியினை மேற்கொண்டார். அதாவது, அகத்தொழிலால் சிவனது அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே யோக நெறியாகும். "யோகம்" என்ற சொல்லின் பொருள் சேர்க்கை என்பதாகும். இதனாலேயே இவர் இவ்வுலக வாழ்க்கைகுத் தேவையான பொன், பொருள் எல்லாவற்றையுஞ் சிவபெருமானே அவருக்கு வழங்கினார். பின்பு இவர் சேரமான் பெருமாளுடன் நட்புக் கொண்டு பல தலங்களுக்குச் சென்று பதிகம் பாடினார். இறுதியில் இவர் தனது பதினெட்டாவது வயதில் கைலையை அடைந்து மீண்டும் இறைவனுக்குத் தொண்டுபுரியும் பெரும்பேற்றைப் பெற்றுக் கொண்டார்.

இறுதிக் குரவராக மாணிக்கவாசகப் பெருமான் இவர் பாண்டி நாட்டிலே திருவாதவூரில் பிறந்தார். திருவாதவூரிற் பிறந்ததால் வாதவூரர் என்ற சிறப்புப் பெயரினையும் பெற்றார். இவர் பாண்டிய மன்னனுக்கு அமைச்சராகப் பணியாற்றிய அமாத்தியப் பிராமணக் குலத்தவராவார். எனவே இவர் சிறு வயதிலேயே பல கலைகளிலும் விற்பன்னராய் விளங்கிப் பாண்டிய மன்னனுக்கு முதலமைச்சராய்ப் பணியாற்றினார். வாதவூரர், அமைச்சர் பணிகளைச் செவ்வனே செய்தவராயினும், உலக வாழ்வின் பற்றின்றிச் சிவனடிகளைச் சிந்திக்கத் தொடங்கினார். தனக்குச் சற்குரு ஒருவர் கிடைக்க மாட்டாரா என ஏங்கினார்.

இவருடைய ஏக்கம் இறைவனுக்கு விளங்கியது போல, வாதவூரர் ஒருமுறை குதிரை வாங்குவதற்கெனப் பரிவாரத்துடன் திருப்பெருந்துறையை அடைந்தபோது ஒரு சோலையில் இருந்து சிவ நாமம் ஒலிக்கக் கேட்டார். உடனே ஆவலோடு அங்கு ஓடினார். அங்கு குருந்த மரநிழலில் அருட்குரவர் ஒரவர் தம் அடியார் புடைசூழ எழுந்தருளியிருந்தார். எம்பெருமானே தம்மை ஆட்கொள்ள அருட்குரவராய் எழுந்தருளி இருந்தது போல் இருந்தது. அவர் உள்ளம் பாகாய் உருகியது. ஆனந்தக்கண்ணீர் அருவியாய் ஓடியது. ஆரா இன்பத்தால் அவர் ஆடிப்பாடினார். "அடினை ஆட்கொண்டு உய்வித்து அருளுக" என்று தமது இச்சையை வெளிப்படுத்தினார். அருட்குரவரும் திருவைந்தெழுத்தை அவர் காதில் ஓதி முப்பொருள்களின் உண்மைகளைத் தெரிவித்தார். இறையருள் பெற்ற வாதவூரரின் நாவில் ஞானவாணி வந்து குடியமர்ந்து விட்டாள். அடிகள் மழைமாரியென அருட்பாக்களைப் பொழியத் தொடங்கினார். தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அருட்குரவரின் திருவடியில் ஒப்படைத்து விட்டு இறைவனுக்குப் பணி செய்வதையே பெரும் பாக்கியமாகக் கொண்டார். குதிரை வாங்குவதற்குத் தாம் கொண்டு வந்த பாண்டியனின் பொருள் யாவற்றையும் சிவாலயங்களுக்கும், சிவனடியார்களுக்கும் வாரி வாரிச் செலவழித்தார். வாதவூரர் ஒருபொழுது பிற சமயத்தாரை வாதில் வென்று ஊமைகளாக்கிப் பின் ஊமை நீங்கிச் சைவ சமயத்தவர்களாக்கினார். மற்றொருபொழுது பிறவியில் ஊமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த பெண்ணைப் பேசச்செய்து வாதிட வந்தோர் கேட்டகேள்விகளுக்கு விடை சொல்லச் செய்தார். சைவ சமய மேம்பாட்டிற்காகத் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் பாடினார். மாணிக்கவாசகருடைய வாழ்க்கை வரலாறு அன்பு நெறியைச் சிறப்பாக விளக்குகின்றது. அவர் அருளியச் செய்த பாடல்கள் "கருப்பஞ் சாற்றிலே தேன் கலந்து, பால் கலந்து செங்கனித் தீஞ்சுவை கலந்தது போன்று தெவிட்டாது இனிக்கும். மாணிக்கவாசகப் பெருமான் ஞான மார்க்கத்திலேயே இறைபணிகளைச் செய்யத் தொடங்கினார். ஞானமானது ஆன்மாவாகிய தன்னைச் சிறப்பிதஞ் செய்தல். அதாவது சிவனை உருவம், அருவம், அருவுருவம் ஆகிய முத்திருமேனிகளையுங் கடந்து, சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும்.

நன்றி: சைவநீதி (சித்திரபானு- ஐப்பசி)

## ஓம் சம்பவே நம

இது சிவபெருமானின் அஷ்டோத்தர சதநாமாவில் உரைக்கப்பட்டுள்ள திருநாமங்களில் ஒன்று

மூன்றாவது திருநாமம்

சுகத்தை உண்டு பண்ணுபவர். ஆநந்தமுள்ளவர். அநாதியான சம்சாரத்தில் பல பிறவிகளில் சுழன்று சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் ஜீவராசிகளுக்குச் சிறிது காலம் உபஸம்ஹார மூலமாக சுகமளிப்பவர். வைத்தியர் ரணசிகிச்சை செய்வது போல் உபஸம்ஹாரமும் கருணையால் செய்யப்படுவதால் இம்சையாகாது. இதுவும் சுருதி பிரசித்த திருநாமம். "சம்" என்பது சுகம் எனும் பொருள் கொண்ட அவ்யயம். அது இவரிடம் இருந்து உண்டாவதால் சம்பு என்ற சொல் தோன்றிற்று.

"சிவ ஏகோத்யேய, சிவங்கர"
இவன் ஒருவனே தியானம் செய்யத்தக்கவன் எனச் சுருதி கூறுகிறது. இந்நாமம் உபஸம்ஹாரமூர்த்தியாக தியானம் செய்யும்படி கூறப்படுகிறது. சிருஷ்டிலயம் இரண்டும் அடுத்தடுத்துக் கூறப்பட்டதால் இடையிலுள்ள பாலனமும் அதைச் சங்கல்பிக்கும் மூர்த்தியும் இவரே என்று உணர்த்தப்படுகிறது.

**ஸ்ரீ சிவநாம அஷ்டோத்தர சதம் மூலமும் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஸ்ரீ பாஸ்கரராயர் ஆகியோர் கருத்தைத் தழுவி ஸாஹித்ய வாங்முக பூஷணம் பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா இயற்றிய தமிழுரையும் என்னும் நூலில் (1950) இருந்து...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை நவநீதகிருஷ்ண பாரதியார்

யாழ்ப்பாண மாவட்டம் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நவநீதகிருஷ்ண பாரதி தமிழ்நாடு, கிருஷ்ணாபுரம், கரவட்டங்குடியில் சுப்பிரமணிய பாரதி - இலக்குமி என்போருக்கு மகனாகப் (1889.03.01) பிறந்தார். இளம் வயதில் இலக்கணம், இலக்கியம், தருக்கம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் திருமுறை ஆய்வில் ஈடுபட்டார். இவர் 1917 ஆம் ஆண்டு வள்ளல் இராமநாதன் துரையின் அழைப்பின் பெயரில் ஈழநாட்டிற்கு வருகை தந்து இராமநாதன் கல்லூரியிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். தேசநேசன் இதழில் ஆசிரியராகவும் பணியாற்றினார். இவரது மனைவி பெயர் சவுந்தரநாயகி. சமூகசேவகி காலஞ்சென்ற பத்மாவதி பூர்ணானந்தா இவர்களது மகள் ஆவார். இவர் மாவை வெண்ணெய்க் கண்ணனார் என அழைக்கப்படுகின்றார்.

இவர் உலகியல் விளக்கம், பறம்புமலைப் பாரி, செழுங்கதிர்ச் செல்வம், திருவடிக் கதம்பம் போன்ற நூல்களை எழுதியதுடன் மாணிக்கவாசகப் பெருமான் இயற்றியருளிய திருவாசகத்துக்கு உரையும் எழுதியுள்ளார். இவருக்கு யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் புலவர்மணி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

திருவாசகத்திற்கு இவர் எழுதிய உரை ஆராய்ச்சிப் பேருரையாகும். இவரது அகன்ற புலமையையும் ஆழ்ந்த அனுபவத்தையும் உரை வெளிப்படுத்துகின்றது. இவர், திருவாசகம் முழுதும் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் அகப் பொருள் நுதலி வருவதாகக் கருதி உரை கண்டுள்ளார். சிவபுராணம் - திருவாசகத்தின் தற்சிறப்புப் பாயிரம் திருச்சதகம்- நுதலிய பொருள் நீத்தல் விண்ணப்பம்- நுதலிய பொருள் மேல்வருவன எல்லாம் காதல் பாவனை என்பது இவர்தரும் குறிப்பு. இவர் உரை, கருத்து பொழிப்பு விசேடம் ஆகியவற்றுடன் சிறப்பாக அமைந்துள்ளது.

இவர் இயற்றிய தனிச் செய்யுள்களின் தொகுப்பாகிய உலகியல் விளக்கம் என்னும் நூலின் பதிப்பாசிரியராய் விபுலானந்த அடிகள் பணியாற்றியுள்ளார். அடிகளின் பதிகத்தினையும், கடவுள் வாழ்த்தினையும் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட முன்னுரையினையும் கொண்டு 1922 இல் இந்நூல் வெளியிடப்பட்டது.

இவர் எழுதிய நூல்கள்



உலகியல் விளக்கம் (செய்யுள் தொகுப்பு), 1922
பாரதீயம் (3 பாகங்கள், இலக்கண நூல்), 1949
திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை, தெல்லிப்பழை, 1954
பறம்புமலைப் பாரி (செய்யுள்கள்)
புத்திளஞ் செழுங்கதிர்ச் செல்வம் (செய்யுள்கள்)
திருவடிக் கதம்பம் (செய்யுள்கள்)
காந்தி வெண்பா (அச்சில் வெளிவரவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் தமிழர் இசைக்கருவிகள் - பகுதி 4- தாரை

சரவண பிரபு ராமமூர்த்தி,
புதுச்சேரி, இந்தியா.



தாரை சுமார் 12 அடி நீளம் வரை நீண்டு இருக்கும் உலோக வார்ப்பில் அமைந்த ஊதும் இசைக்கருவி. ஊதும் பகுதி சிறுத்தும், இடைப்பகுதி முதல் அடிப்பகுதி வரை சீராக அகன்றும் காணப்படும் பழந்தமிழர் கருவி தாரை. இரண்டு முதல் ஆறு பாகங்களைக் கொண்ட தாரை, எளிதாகக் கழற்றி மாட்டும் வசதியோடு உருவாக்கப்படும். தற்காலத் தாரைகள் பித்தளையில் செய்யப்படுகின்றன. மிகவும் நீண்டு இருப்பதால், தாரை இசைக்கப்படும் பொழுது கீழே விழாமல் இருக்க ஒரு மரக்கம்புடன் சேர்த்து கட்டப்பட்டு தரையில் நிறுத்தப்படும். வளைந்த தாரையும் உண்டு. கோணத்தாரை என்று அழைப்பர்.

தாரையில் விரல் துளைகள் எதுவும் இல்லை. காற்றைச் செலுத்த முகப்பில் ஒரு சிறிய துளை, இசை வெளியேற முடிவில் புனல்வடிவ பெரிய துளை மட்டும் இருக்கும். சீரான, இடை நிற்காத இசை தருவது தாரை. சிறுதாரை, கோணத்தாரை, நெடுந்தாரை என சிறிய வடிவ வேற்றுமைகளுடன் இக்கருவி பயன்படுத்தப்பட்டது. கோணத்தாரை சற்று வளைந்து அகலமாக இருக்கும். கோணத்தாரை எங்கும் தற்பொழுது பயன்பாட்டில் இல்லை.

தாரை தப்பட்டையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது என்பது தமிழர் சொல்லாடல். தாரை பெரும்பாலும் மறைந்து விட்டாலும் அந்த மரியாதைச் சொல் இன்றும் நம்மிடையே நிலைத்து நிற்கின்றது. தாரை தப்பட்டைக் குழு என்று சொல்வார்கள். ஆனால் அக்குழுவில் தாரை இருக்காது. மரியாதையின் அடையாளமாகக் கருதப்படும் தமிழர் இசைக்கருவிகளில் தாரை முதன்மையானது. கோயில்களில் சாமி புறப்பாட்டின்போதும், தேர்த்திருவிழா காலத்திலும், மற்ற விழாக்களிலும் இக்கருவி இசைக்கப்படுகிறது. நாட்டார் தெய்வங்களின் கொடை விழாக்களில் தாரை முழங்குவதை காணலாம். திருச்சி வெல்லமண்டி சோலாப்பூர் மாரியம்மன் கோவில், திருச்சி குழுமாயியம்மன் கோவில், திருச்சி தொட்டியம் மதுரைகாளியம்மன், ஸ்ரீபெரும்புதூர் அங்களாம்மன் ஆகிய கோவில் விழாக்களில் தாரை இதுவரை தொடர்ச்சியாக இசைக்கப்படுகிறது.

திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயிலின் ஆனித் தேரோட்டத்திற்கு தாரை ஊதுகிறார்கள். இக்கோவிலில் கிபி 1230ல் எழுதப்பட்ட மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு தாரை இசைக்கலைஞர்களுக்கு சம்பளம் வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறான் என்கிற தகவலை தெரிவிக்கின்றது. "தாரை ஊதிகள் பேர் இரண்டுக்கும் சின்னமூதி பேர் ஒன்றுக்கும்" என்று தலைக்கு நாலரையாக நாற்பத்தைந்து அச்சு சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. தாரை ஊதிகள் என்பார் தாரை இசைக்கருவியை இசைப்பவர். திருமெய்யம் சத்தியமூர்த்தி பெருமாள் கோவிலுக்கு திருமேனி வீரபாண்டிய ஆசாரி என்பவர் ஒரு தாரையும் இரண்டு தவளைச் சங்கும் கொடையாக தந்துள்ளார்(கிபி *1461*).

சுவாமிமலையில் உள்ள சுவாமிநாதசாமி கோவிலில் நடைபெறும் சூரசம்ஹார நிகழ்வில் கைக்கோள செங்குந்த மரபினர் சிவ குடும்பமாகவும் நவவீரர்களாகவும் வேடம் தரித்து கோவிலுக்கு வருவர். அப்பொழுது நடைபெறும் சூரன்போர் நிகழ்வில் தாரை, எக்காளம், பறை மற்றும் தவண்டைகள் முழக்கமும் அந்த வீரிய இசையும் வானைமுட்டும்.

**புழக்கத்தில் உள்ள இடங்கள்**

- திருச்சி மற்றும் தஞ்சை அடுத்த சுந்தரப்பெருமாள் கோவில் பகுதிகளில் தாரை இசைக்கலைஞர்கள் இருக்கிறார்கள். சுந்தரப்பெருமாள் கோவிலில், லெட்சுமணன் என்பவர் தலைமையில் ஒரு குழுவினர் தாரை வாசிக்கிறார்கள்.
- காஞ்சி பல்லாவரம் என்கிற பாலாற்றங்கரை கிராமத்திலும் சின்ன காஞ்சிபுரத்திலும் சில தாரை கலைஞர்கள் எஞ்சி இருக்கிறார்கள். காஞ்சி பல்லாவரத்தில் மணி என்கிற கலைஞர் தாரை இசைக்கிறார். சென்னை வட்டாரத்திலும், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் பகுதிகளிலும் தாரை உண்டு.
- சேலம், எடப்பாடி, செட்டிபட்டி மற்றும் ஈரோடு மாவட்டத்திலும் கொங்கு நாட்டின் சில பகுதிகளிலும் தாரை புழக்கத்தில் உள்ளது. இரா. நாகராஜன் குழுவினர் *(919942742448)*.

மத்தியப் பிரதேசத்தில் மரியா பழங்குடியினரிடம் "கோஹிக்" என்ற பெயரிலும், உத்தரப் பிரதேசத்தில் "தூரி" என்ற பெயரிலும், கருநாடகத்தில் "பாங்கு" என்ற பெயரிலும், குஜராத்தில் பாம்பை போல் வளைந்து "நாகபாணி" என்ற பெயரிலும், நெடுந்தாரை போன்ற தாரை "புங்கால்" என்றும், ஒரிசாவில் "கஹல்" என்ற பெயரிலும், கங்கை சமவெளி பிரதேசத்தில் "கர்ண" என்ற பெயரிலும் மிகச்சிறிய மாற்றங்களோடு பரவலாக புழக்கத்தில் இருக்கிறது தாரை. திபெத் புத்த மக்களிடம் இக்கருவி துங்சேன் என்ற பெயரில் புழக்கத்தில் உள்ளது.

ஆஸ்திரேலிய பூர்வ குடிகள் தைல மரத்தைக் குடைந்து செய்யப்பட்ட நமது தாரை போன்ற கருவியை இசைக்கிறார்கள். அதன் பெயர் டிட்ஜெரிடோ. முன்பு பூச்சிகள் இயற்கையாக அரித்து துளையிட்ட மூங்கில் அல்லது தைல மரங்கள் கொண்டு இக்கருவி உருவாக்கப்பட்டது. ஊதும்பொழுது இடையில் காற்று வெளியேறாமல் இருக்க தேன்மெழுகுக்கொண்டு ஓட்டைகளை அடைத்து இருப்பார்கள். வாய் வைத்து ஊதும் இடமும் தேன்மெழுகுக் கொண்டு பூசப்பட்டு இருக்கும். அழகிய வண்ணங்கள் தீட்டப்பட்ட இக்கருவிகள் பார்க்க வண்ணமயமாக இருக்கும். ஆஸ்திரேலிய பூர்வ குடி பெண்கள் தான் இக்கருவிக்கு வண்ணம் தீட்டி அழகு செய்கிறார்கள். ஆனால் அவர்கள் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருவியை இசைப்பது இல்லை. ஆஸ்திரேலியா பூர்வ குடிகளுக்கும் தமிழர்களுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. அவர்களின் இசையும் மொழியும் நம்மொடு தொடர்புடையவை. தாரைக்கருவி பார்க்க பாம்பு போன்று நீண்டு இருக்கின்றது. அடிலெய்டு ஆற்று பகுதியில் வாழ்ந்த வாரா (Warray) மற்றும் மத்திய ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த பிண்டுபி (Pintupi) என்கிற பூர்வ குடிகள் இந்த கருவியை "பாம்பு" என்றே அழைத்து இருக்கிறார்கள். சில பகுதிகளில் இக்கருவி "இடக்கி" என்று அழைக்கப்படுக்றது. தமிழர் இசை மரபில் "இடக்கை" என்கிற தோற்கருவி உண்டு.

அண்மைக்காலங்களில் தமிழர்கள் கேரள செண்டை மேளக்குழுக்களுக்கு மிகுந்த வரவேற்பு கொடுப்பதால் தமிழகத்தில் ஆதரவற்று தாரை போல் பல தொல் தமிழர் இசைக்கருவிகள் அழிவின் விளிம்பில் உள்ளன.படத்தில் உள்ள QRI ஸ்கேன் செய்தால் நீங்கள் பல தமிழர் இசைக்கருவிகளைப் பார்க்கலாம்.

பாடல்

**சங்கு துந்துபி தாரை பேரி இம்முதல்**
**பொங்கு பல்லிய நாதம் பொலிந்து எழ**
**அங்கணன் அருளால் அவை கொண்டு உடன்**
**பொங்கு காதல் எதிர் கொளப் போதுவார்'** *சேக்கிழார் - திருமுறை 12.2101*

**தவில்முர சத்தந் தாரை பூரிகை**
**வளைதுடி பொற்கொம் பார சூரரை**
**சமர்தனில் முற்றும் பாறி நூறிட ...... விடும்வேலா - திருப்புகழ்**

**திருவாசகம்**

திரு- திருவருள்.
வாசகம்- வாக்கு.
திருவருள் உள்நின்று உணர்த்தப் பசுகரணம் பதிகரணமாகி, அதாவது தன்செயல் அற்றுத் தானற்ற பின் நாதன்றன் செயலான நிலையில் விளைந்த வாக்கு திருவாசகம் என்பதாம்.

திரு- என்பது பிறவித் துன்பமகன்று எய்தப்பெருவதாகிய வீடு.
வாசகம்- குருமணியின் உபதேசமும் மறைபயின்ற வாசகமும் ஆகிய திருவைந்தெழுத்து.

ஆகவே திருவாசகம் என்பது உபதேச வார்த்தையாய் முக்தியருளுவதாகிய திருவைந்தெழுத்தும் அதன் பொருளாகிய சிவமுமாம் என்பார் சிலர்.

**(திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் வரைந்த குருவருள் விளக்கம் என்னும் (திருவாசக) உரையில்உள்ள முகவுரையில்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதம்பரம் தேர் - ஆனித்திருமஞ்சனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிர்காமம் – கந்தனாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம். தொ.பே.: 021 224 4510